விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 014 வள்ளுவர் ஆண்டு 2054 மார்கழி 17 செவ்வாய்க்கிழமை (02.01.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

## லிட்ரோ, லாஃப்ஸ் சமையல் எரிவாயு விலை அதிகரிக்கப்பட்டது

(கொழும்பு)

லிட்ரோ, லாஃப்ஸ் சமையல் எரிவாயு சிலிண்டர்களின் விலைகள் பாரியள வில் அதிகரிக்கப்பட்டுள்ளன.

லிட்ரோ எரிவாயு விலையை அதி கரிக்க தீர்மானித்துள்ளதாக லிட்ரோ நிறுவனத்தின் தலைவர் முதித பீரிஸ் தெரிவித்துள்ளார்.

அதன்படி, 2.3 கிலோ கிராம் லிட்ரோ எரிவாயு சிலிண்டரின் விலை 127 ரூபாயால் அதிகரிக்கப்பட்டுள்ள நிலையில் அதன் புதிய விலை 795 ரூபா யாகும்.

5 கிலோ கிராம் லிட்ரோ எரிவாயு சிலிண்டரின் விலை 276 ரூபாயால் அதிகரிக்கப்பட்டுள்ள நிலையில் அதன் புதிய விலை 1,707 ரூபாயாகும்.

12.5 கிலோ கிராம் லிட்ரோ எரிவாயு சிலிண்டரின் விலை 685 ரூபாயால் அதிகரிக்கப்பட் 15

## பெற்றோல், டீசல் விலைகள் அதிகரிப்பு




(கொழும்பு)

பெற்றோல், டீசல் விலை கள் நேற்று முதல் அதிகரிக் கப்பட்டுள்ளதாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத் தாபனம் அறிவித்துள்ளது.

அந்த வகையில் நேற்று திங்கட்கிழமை முதல் அமு லுக்கு வரும் வகையில் எரி பொருள் விலைகளில் திருத் தம் மேற்கொள்ளப்பட்டுள் ளது.

அதன்படி ஒக் டேன் 92 ரக பெற் 15

## பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்காகவே
# கடினமான தீர்மானங்கள் அனைத்தும் எடுக்கப்பட்டன
## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க



(கொழும்பு)

நாட்டின் பொருளாதாரத்தை கட்டி யெழுப்புவதற்காகவே கடினமான தீர்மானங்கள் அனைத்தும் எடுக்கப்பட் டன என ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்க தெரிவித்துள்ளார்.

(16ஆம் பக்கம் பார்க்க)

## மதுபானம், சிகரெட் விலைகள் உயர்வு

(கொழும்பு)

வற் வரி திருத்தத்திற்கு அமைய மதுபானம் மற்றும் சிகரெட் விலைகளும் நேற்று முதல் அதிகரிக்கப் பட்டுள்ளன. 15

மல்லாகத்தில்
## விபரீத முடிவெடுத்த இளைஞன் மரணம்



15

## மக்கள் பாவனைக்காக சங்கிலியன் பூங்கா திறப்பு




15

## அரசின் வரித் திருத்தம் தொடர்பில் மக்கள் மத்தியில் தவறான கருத்து
### சாகல ரத்நாயக்க தெரிவிப்பு



(கொழும்பு)

அரசாங்கத்தின் வரி திருத் தம் தொடர்பில் பல்வேறு தரப் பினரும் மக்கள் மத்தியில் தவ றான கருத்துக்களைப் பரப்பி வருவதாக ஜனாதிபதி பணிக் குழாமின் தலைமை பணிப்பாளரும் ஜனாதிபதியின் ஆலோசகருமான சாகல ரத்நாயக்க தெரிவித்துள் ளார்.

வரித் திருத்தங் கள் குறித்து பொய் 15

## 2024 தமிழர்கள் தீர்க்கமான முடிவுகள் எடுக்கும் ஆண்டு
### இரா.சம்பந்தன் தெரிவிப்பு



(கொழும்பு)

பிறந்துள்ள 2024ஆம் ஆண்டு தமிழர்களாகிய எமக் குத் தீர்க்கமான முடிவுகளை எடுக்கக்கூடிய ஆண்டாக இருக் கும் என்று நம்புகின்றோம் என திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் தெரி வித்துள்ளார். 15

## போதைப்பொருட்களுடன் கோண்டாவிலில் இருவர் கைது



(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் பகுதியில் உள்ள வீடொன்று பொலிஸா ரால் சுற்றிவளைக்கப்பட்டு நடத் தப்பட்ட தேடுதலில் போதைப் பொருட்கள் மீட்கப்பட்டுள் ளன.

500 கிராம் கேரள கஞ்சா, 100 கிராம் ஹெரோயின், ஆறு போதை மாத்திரை கள், போதை மருந் 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளாதாரத்தையும் நாட்டையும் கட்டியெழுப்ப நடவடிக்கை எடுக்கப்படும்

## அமைச்சர் மனுச நாணயக்கார



(கொழும்பு)

பொருளாதாரத்தையும் நாட்டையும் மக்களையும் கட்டியெழுப்ப நடவடிக்கை எடுப்பதாக தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

புதியவருடத்தில் கடமைகளை ஆரம்பிக்கும் முகமாக அமைச்சில் நேற்று நடைபெற்ற உறுதிமொழி வைபவத்தில் கலந்துகொண்டு அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

இவ்வருடத்திலும்அமைச்சின் பணிகளை முன்னைய ஆண்டைப் போன்று மிகவும் வினைத்திறனுடன் முன்னெடுப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அனைத்து அதிகாரிகளிடமும் அமைச்சர் கேட்டுக்கொண்டார்.

கடந்த வருடத்தில் அமைச்சின் உத்தியோகத்தர்கள் தமது கடமைகளை உரிய முறையில் நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாகவும், இதன் மூலம் தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு நாட்டிலேயே வெற்றிகரமான அமைச்சாக மாற முடிந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

மேலும் கடந்தகாலங்களில் இலங்கையில் பாரிய முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாகவும், இதன் பலனாக இந்த வருடத்தையும் மிகவும் வெற்றிகரமான ஆண்டாக மாற்ற முடியும் எனவும் அமைச்சர் மனுஷ நாணயக்கார நம்பிக்கை வெளியிட்டார். (ம-7)

# சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரிப்பு

(கொழும்பு)

2023ஆம் ஆண்டில் மட்டும் 1.5 மில்லியன் சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை தந்துள்ளதாக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது.

இதன்படி கடந்த ஆண்டு டிசம்பர் மாதத்தில் 210,352 சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை தந்ததாக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது.

அதன்படி 1.5 மில்லியன் சுற்றுலாப்பயணிகள் என்ற 2023 ஆம் ஆண்டிற்கான அரசாங்கத்தின் இலக்கை விட 12,697 குறைவாக உள்ளதாக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது.

எவ்வாறாயினும், 2023 இல் இலங்கைக்கு விஜயம் செய்த சுற்றுலாப் பயணிகளின் மொத்த எண்ணிக்கை அதற்கு முந்தைய ஆண்டை விட 106.6 விகித அதிகரிப்பு என்றும் சுட்டிக்காட்டியுள்ளது.

மேலும் கடந்த நான்கு ஆண்டுகளில் ஒரு மாதத்திற்கு அதாவது கடந்த டிசம்பரில் அதிகபட்ச சுற்றுலாப்பயணிகள் வருகை தந்துள்ளதாகவும் இது டிசம்பர் 2022 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 128.7 விகிதம் அதிகம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

# கிளிநொச்சி வைத்தியசாலைக்கு கண் பரிசோதனை இயந்திரம் கையளிப்பு



(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டப் பொது வைத்தியசாலைக்கு 2.5 மில்லியன் ரூபா பெறுமதியிலான கண் பரிசோதனை இயந்திரம் நேற்று கையளிக்கப்பட்டுள்ளது.

வைத்தியசாலைப் பணிப்பாளரால், பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனுக்கு முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கமைய, கனடா, மொன்றியலில் இயங்கும் புறுட்ஸ் கபி (Fruits Haby) நிறுவன உரிமையாளரான சின்னத்துரை சண்முகலிங்கம் அவர்களின் 2.5 மில்லியன் ரூபா நிதிப்பங்களிப்பில் கொள்வனவு செய்யப்பட்ட, ஜப்பான் தொழிநுட்பத்துடன் கூடிய இப்பரிசோதனை இயந்திரம் நேற்றையதினம் கண்சிகிச்சைப் பிரிவினரிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில், வைத்தியசாலை நிருவாகத்தினரால் தெரிவு செய்யப்பட்ட 100 பயனாளிகளுள் முதற்கட்டமாக 39 பேருக்கான இலவச மூக்குக் கண்ணாடிகளும் வழங்கிவைக்கப்பட்டன.

மாவட்டப் பொது வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியகலாநிதி சுகந்தன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி. துஸ்யந்தன், கண் சிகிச்சை நிபுணர், வைத்திய கலாநிதி. ஞானரூபன், பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், அருட்தந்தை யூட் அமலதாஸ் அடிகளார், புறுட்ஸ் கபி நிறுவன உரிமையாளர் சின்னத்துரை சண்முகலிங்கம் மற்றும் அவரது குடும்பத்தினர், வடக்குமாகாண மேனாள் கல்வி அமைச்சர் தம்பிராசா குருகுலராஜா, கரைச்சிப் பிரதேச சபையின் மேனாள் தவிசாளர் அருணாசலம் வேழமாலிகிதன், கிளிநொச்சி நகர வர்த்தகர் சங்கத்தினர், இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க கிளிநொச்சிக் கிளையினர், வைத்தியசாலை உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டிருந்தனர். (ம-7)

# பல்வேறு அசௌகரியங்களை வரி விதிப்பு உள்ளாக்கியுள்ளது

## செல்வம் அடைக்கலநாதன் எம்.பி

(மன்னார்)

இந்த நாட்டில் வரி விலக்கு ஏற்பட்டிருந்த நிலையில் தற்போது வரி விதிப்பு என்பது பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ள மக்களை பல்வேறு அசௌகரியங்களுக்கு உள்ளாக்கியுள்ளது.

இதை ஏற்றுக்கொள்ள முடியாது. இவ்விடயம் தொடர்பில் அரசாங்கம் உடனடியாக கவனம் செலுத்த வேண்டும் என வன்னிமாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

மன்னாரில் உள்ள அலுவலகத்தில் நேற்று மதியம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

வரி விதிப்பு என்பது நாட்டின் வளர்ச்சிக்கு என்பதில் எமக்கு மாற்றுக் கருத்து இல்லை.

ஆனால் தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலை நிமித்தம் குறித்த வரி அமுல் படுத்த பட்டிருக்கின்றன. மக்களின் அன்றாட வாழ்க்கையில் ஈவிரையின்றி செயல்படுவதை ஏற்றுக் கொள்ள முடியாது.

மக்களின் பொருளாதாரத்தில் இருந்து இந்த வரி விலக்கு அமுல் படுத்தப் பட்டிருக்கின்றமை தேவையற்ற ஒரு விடயமாக காணப்படுகிறது. இந்த வருடத்திலாவது அரசாங்கம் இந்த வரி விதிப்பை மிக குறைவான மதிப்பீடு கொள்ள வேண்டும் என எதிர் பார்க்கப்பட்டது.

மேலும் இனப்பிரச்சினை தீர்வையும் அரசாங்கம் நடைமுறைக்கு வரும் வகையில் செயல்படுத்தப்பட வேண்டும். என அவர் மேலும் தெரிவித்தார். (ம-7)


விண்ணக வாழ்வில்

எட்டாம் ஆண்டு



அன்னை மடியில் 24 . 09 . 1980

ஆண்டவன் மடியில் 02 . 01 . 2016

அமரர்

தீபா கொங்கேஸ்வரன்

எங்கள் அன்புச் செல்வ மகள் எங்களிடம் இருந்து
பறிக்கப்பட்டு எட்டு ஆண்டுகள் ஆகிவிட்டன.
ஆனால் எங்கள் இதயம் ஆறவில்லை என்றுமே ஆறாது...

"நின்றும் இருந்தும் கிடந்தும் நடந்தும்
என்றும் உனது நினைவுடன் வாழும்"

உனது அன்பு அப்பா, அம்மா, கணவர்,
ஆசை மகள் சா[illegible]

தண்ணீரூற்று,
முள்ளியவளை.

(C-8063)



மலிவு விற்பனை

கடந்த 40 வருடங்களாக யாழ்.மக்களின் நன் மதிப்பைப் பெற்ற SILVER SHIELD SOCKS
பாடசாலை மாணவர்களுக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கும் ஏற்ற நைலோன்/ கொட்டன் காலுறைகள் (SOCKS) மலிவு விலையில்

மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளவும்

உலகெங்குமுள்ள உறவுகளிடமிருந்து ஒருசில நிமிடங்களில் உங்கள் பணத்தை

WESTERN UNION MONEY TRANSFER | Ria | MoneyGram. money transfer

ஊடாக பெற்றுக்கொள்ளவும். (C-8064)

ஸ்ரீ முருகன் தொலைத்தொடர்பகம்
303, K.K.S வீதி, யாழ்ப்பாணம்.
021 222 5392, 076 315 6470


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொடுப்பனவுகளுக்காக வாக்களித்தால் மீண்டும் ஏமாற்றப்படுவது மக்களே!

## சரத்பொன்சேகா



**(கொழும்பு)**

**ஜனாதிபதி தேர்தலின் போது மக்கள் சரியான பிரதிநிதிகளை தெரிவு செய்ய வேண்டும். அவ்வாறில்லை என்றால் மீண்டும் மக்கள் ஏமாற்றப்படுவதை எவராலும் தடுக்க முடியாது எனபாராளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத்பொன்சேகா தெரிவித்துள்ளார்.**

நாட்டை கடந்த 75 ஆண்டுகளாக ஆட்சி செய்தவர்களாலேயே இன்று இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது. இவ்வாண்டு தேர்தலுக்கான ஆண்டாகும்.

இவ்வாறான மோசடிக்காரர்களான அரசியல்வாதிகளிடமிருந்து ஆட்சியை பறிப்பதற்கு மக்கள் அர்ப்பணிப்புடன் செயற்படாவிட்டால் நாட்டைக் கட்டியெழுப்ப முடியாது .

ஊழல், மோசடியற்ற நாட்டை நேசிக்கும் தலைவரை மக்கள் தெரிவு செய்ய வேண்டும்.

நிவாரணங்களுக்காகவும், சமூர்த்தி கொடுப்பனவுகளுக்காகவும் வாக்களித்தால் கடந்த ஆண்டைப் போன்று மீண்டும் அனைத்தையும் இழக்க நேரிடும் என தெரிவித்தார். (5-6)

## 24 மணித்தியாலங்களில் 1,229 பேர் கைது

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்டு வரும் விசேட நடவடிக்கையின் கீழ், நேற்று அதிகாலை 12.30 உடன் நிறைவடைந்த 24 மணித்தியாலங்களில் 1,229 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

அவர்களில் 86 பேர் தடுப்புக்காவல் உத்தரவில் வைக்கப்பட்டு, விசாரிக்கப்பட்டு வருகின்றனர்.

அத்துடன், குறித்த காலப் பகுதியில், 16 கிலோவுக்கு அதிக நிறையுடைய பல்வேறு போதைப்பொருட்களும் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. (5-6)

## ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்த சுதந்திரக்கட்சி உறுப்பினர்



(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினராக செயற்படும் ஷான் விஜயலால் டி சில்வா ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்து கொண்டுள்ளார்.

இதனை ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க உறுதிப்படுத்தியுள்ளார்.

கடந்த பொதுத் தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவை பிரதிநிதித்துவப் படுத்தி அவர் பாராளுமன்றத்திற்கு தெரிவாகியிருந்தார். (5-6)

## வரிக்கோப்புகளை பதுக்கிய 27 நிறுவனங்கள் மீது சட்ட நடவடிக்கை

### ஜனாதிபதி ஆலோசகர்

(கொழும்பு)

வரி செலுத்தாத எந்தவொரு நிறுவனமும் வரி வலையில் சிக்காமல் ஒளிந்து கொள்ள இடமளிக்கப்படமாட்டாது என பாராளுமன்ற விவகாரங்களுக்கான ஜனாதிபதி ஆலோசகர் ஆஷூமார சிங்க தெரிவித்துள்ளார்.

சிறிகொத்தவில் இடம்பெற்ற மத்திய கூட்டமொன்றில் நேற்று முன்தினம் கலந்து கொண்ட போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

வரி செலுத்துபவர்கள் யார், யார் வரி செலுத்துவதில்லை என்பதை ஆராய்வதற்கான முறைமையொன்று ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் வேலைத்திட்டத்தின் பிரகாரம் 2023ஆம் ஆண்டு எதிர்பார்க்கப்படும் வரி வருமானம் 2850 பில்லியன் ரூபாவாக இருந்தாலும் அதனை 3000 பில்லியனாக தாண்டும் நிலையில் உள்ளது.



ஜனாதிபதியின் திறமையான பொருளாதார முகாமைத்துவத்தினால் இந் நிலைமை எட்டப்பட்டதோடு, மூன்று இலட்சம் கோடியை வசூலித்தமை பெரும் சாதனை ஆகும்.

அத்துடன், வரிக்-கோப்புகளை மறைக்கும் திட்டத்தில் 27 நிறுவனங்கள் ஈடுபட்டுள்ளதோடு, அந்த நிறுவனங்கள் குறித்து விசாரணை நடத்தப்பட்டு வருகின்றது என தெரிவித்தார். (5-6)

## சுகாதாரத்துறையில் வருடாந்தம் சுமார் 600 முறைப்பாடுகள் பதிவு

(கொழும்பு)



சுகாதாரத்துறையில் வருடாந்தம் சுமார் 600 முறைப்பாடுகள் பதிவு செய்யப்படுவதாக சுகாதார அமைச்சர் ரமேஸ் பத்திரண தெரிவித்துள்ளார்.

இதில் மருத்துவர்கள் உட்பட சுகாதார ஊழியர்கள் சம்பந்தப்பட்டுள்ளதாக பேராதனை போதனா மருத்துவமனையில் அண்மையில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் வைத்து அவர் இதனை தெரிவித்துள்ளார்

சுகாதாரத்துறையில் மருத்துவ அலட்சியம் தொடர்பான முறைப்பாடுகள் தொடர்ந்து வந்து கொண்டிருப்பது குறித்து சுகாதார அமைச்சர் இதன்போது கவலை வெளியிட்டுள்ளார்.

இது நோயாளிகளின் நலனில், சுகாதாரத்துறை யின் அர்ப்பணிப்பு பற்றிய கேள்விகளை எழுப்புகிறது எவ்வாறாயினும், நோயாளிகளின் முறைப்பாடுகளின் முழுமையான பகுப்பாய் வில் பல தவறுகள் கண்டறியப் பட்டதாகவும் அமைச்சர் பத்திரன சுட்டிக்காட்டியுள்ளார்.

எனவே, சவால்களை எதிர்கொண்டுள்ள நிலையில், மக்களுக்கான சேவையை முன்னுரிமைப் படுத்துமாறும், நோயாளிகளின் நல்வாழ்வை உறுதிசெய்வதில், அர்ப்பணிப்பை மறுபரிசீலனை செய்யுமாறும் அமைச்சர் பத்திரன சுகாதார பணியாளர்களுக்கு வலியுறுத்தியுள்ளார். (5-6)

## வெதுப்பக உற்பத்தி பொருட்களின் விலைகள் அதிகரிக்கப்படமாட்டாது

### வெதுப்பக உரிமையாளர்கள் சங்கம்

(கொழும்பு)

பாண் உள்ளிட்ட வெதுப்பக உற்பத்தி பொருட்களின் விலை அதிகரிக்கப்படமாட்டாது என அகில இலங்கை வெதுப்பக உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.



புத்தாண்டில் வெதுப்பக பொருட்களின் விலை அதிகரிக்கப்படவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ள போதிலும் அதில் எந்தவித உண்மையும் இல்லையென அந்த சங்கத்தின் தலைவர் என்.கே.ஜயவர்தனர் தெரிவித்துள்ளார்.

கடுமையான பொருளாதார நெருக்கடிகள் இருந்தபோதிலும், வாடிக்கையாளர்களைப் பற்றி சிந்தித்து பாண் உள்ளிட்ட வெதுப்பக பொருட்களின் விலையை அதிகரிக்காதிருக்க தீர்மானித்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (5-6)

## வெள்ளத்தில் மூழ்கிய கொழும்பு ஆர்மர் வீதி



(கொழும்பு)

கடுமையான மழை காரணமாக கொழும்பு ஆர்மர் வீதி பகுதி வெள்ளத்தில் மூழ்கியுள்ளது.

இந்நிலையில் குறித்த பகுதியில் கடும் போக்குவரத்துத் நெரிசல் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

எவ்வாறாயினும், வாகன சாரதிகளை முடிந்தவரை மாற்று வீதிகளை போக்கு வரத்திற்காக பயன்படுத்துமாறு பொலிஸார் அறிவித்துள்ளனர். (5-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுச் செய்திகள்

## பங்களாதேஷ், நியூசிலாந்து இருபது-20 தொடர் சமநிலை



பங்காளதேஷ் கிரிக்கெட் அணி நியூசிலாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 ஒருநாள் மற்றும் 3 இருபது-20 போட்டிகள் கொண்ட தொடரில் ஆடியது. முதலில் நடைபெற்ற ஒருநாள் தொடரை நியூசிலாந்து அணி 2-1 என்ற கணக்கில் கைப் பற்றியது.

இதையடுத்து இரு அணிகளுக்கும் இடையிலான இருபது-20 தொடர் முதல் போட்டியில் பங்காளஷே் வெற்றி பெற்றது. 2ஆவது போட்டி மழையால் கைவிடப்பட்டது. இதனால் 3 போட்டிகள் கொண்ட இருபது- 20 தொடரில் பங்காளதேஷ் 1-0 என்ற கணக்கில் முன்னிலை பெற்றது.

இந்நிலையில், இவ்விரு அணிகளுக்கு இடையிலான 3ஆவது இருபது-20 போட்டி மவுண்ட் மாங்கானுவில் நேற்று நடைபெற்றது. டாஸ் வென்ற நியூசிலாந்து அணி பந்துவீச்சை தேர்வு செய்தது.

அதன்படி, முதலில் களமிறங்கிய பங்காளதேஷ் அணி 19.2 ஓவர்களில் 110 ரன்களுக்கு ஓல் அவுட்டானது.

தொடந்து 111 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்கோடு இறங்கிய நியூசிலாந்து 14.4 ஓவரில்5 விக்கெட் இழப்புக்கு 95 ரன்கள் எடுத்திருந்த போது மழை குறுக்கிட்டது. இதனால் ஆட்டம் நிறுத்தப்பட்டது.

தொடர்ந்து மழை பெய்ததால் டக்வொர்த் லீவிஸ் முறைப்படி நியூசிலாந்து 17 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது. இதையடுத்து. இரு அணிகளுக்கு இடையிலான குறித்த தொடர் 1-1 என சமநிலையில் முடிந்தது. (5-6)

## ஒருநாள் கிரிக்கெட்டில் இருந்து ஓய்வை அறிவித்தார்

### வார்னர்

அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் நட்சத்திர இடது கை பட்ஸ்மனேனான டேவிட் வார்னரின் ஆட்டம் குறித்து சமீபகாலமாக விமர்சனம் செய்யப்பட்டு வந்தது.

இந்த நிலையில்தான் பாகிஸ்தானுக்கு எதிரான தொடர் முடிவடைந்ததும் டெஸ்ட் கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்தார். சிட்னியில் நாளை தொடங்கும் பாகிஸ்தானுக்கு எதிரான டெஸ்ட் போட்டி தான் அவரது கடைசி போட்டியாகும்.

இந் நிலையில் ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் இருந்தும் ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார்.

இரண்டு முறை உலகக் கோப்பையை வாங்கிய அணியில் இடம் பிடித்துள்ளார்.



161 ஒரு நாள் போட்டிகளில் 6932 ரன்கள், சராசரி 45.30, ஸ்டிரைக் ரேட் 97.26, 179 ரன்கள் அவரது அதிக பட்ஸ்ஸ் ஸ்கோர் ஆகும்.

22 சதங்கள், 33 அரைசதங்கள் அடித்துள்ளார்.(5-6)

## வெற்றி பெறும் அளவுக்கு விளையாடவில்லை

### ரோகித்

செஞ்சூரியன் டெஸ்டில் தோல்வியை தழுவிய பிறகு இந்திய கப்டன் ரோகித் சர்மா கூறுகையில், “வெற்றி பெறும் அளவுக்கு நாங்கள் விளையாடவில்லை.

லோகேஷ் ராகுல் அற்புதமாக ஆடி சதம் அடித்தார். ஆனால் பந்துவீச்சுக்கு உகந்த சூழலை கச்சிதமாக பயன்படுத்த தவறி விட்டோம். 2 ஆவது இன்னிங்சில் பட்டிங்கும் மோசமாக இருந்தது.

இதில் விராட் கோலியின் பட்டிங் மட்டும் சிறப்பாக இருந்தது.



தோல்வியில் இருந்து மீண்டு அடுத்த டெஸ்டுக்கு தயாராக வேண்டியது அவசியம். இவ்வாறு அவர் கூறினார்.

(5-6)

## ரொனால்டோ அசத்தல் அல் நஸர் அணி வெற்றி



அல் நஸர் அணி 4 - 1 என்ற கோல் கணக்கில் அல்டாவ்வுன் அணியை வீழ்த்தியது.

கிங் அப்துல்லா ஸ்போர்ட் சிட்டி மைதானத்தில் நடந்த சவுதி புரோ லீக் தொடர் போட்டியில், அல் டாவ்வுன் அணியை எதிர்கொண்டது அல் நஸர்.

ஆட்டத்தின் 13ஆவது நிமிடத்திலேயே அல் டாவ்வுன் வீரர் அஸ்ரப் எய் மஹ்டியோய் அடித்த ஷாட்டை கோல் தடுத்தார். ஆனால் அவர் மீது பட்டுத் திரும்பி வந்த பந்தை அவரே வலைக்குள் தள்ளினார்.

அதனைத் தொடர்ந்து 26ஆவது நிமிடத்தில் மார்செலோ ப்ரோஸோவிக் அசத்தலாக கோல் அடித்தார். அடுத்த 9 நிமிடங்களிலேயே ஜமெரிக் லபோர்டே கார்னர் கிக்கில் இருந்து வந்த பந்தை, மின்னல் வேகத்தில் தலையால் முட்டி அல் நஸருக்காக கோலாக மாற்றினார்.

இதனால் முதல் பாதியில் 2 - 1 என்ற கோல் கணக்கில் அல் நஸர் முன்னிலை வகித்தது. ஆட்டத்தின் 50 ஆவது நிமிடத்தில் அல் நஸர் அணிக்கு ஒடாவியோ மூலமாக மூன்றாவது கோல் கிடைத்தது.

அல் நஸரின் தாக்குதலை சமாளிக்க முடியாமல் அல் டாவ்வுன் அணி திணறியது. கடைசி நிமிடங்களான 90+2இல் கிறிஸ்டியானோ ரொனால்டோ அபாரமாக தலையால் முட்டி கோல் அடிக்க அல் நஸர் அணி 4-1 என்ற கோல் கணக்கில் இமாலய வெற்றி பெற்று புள்ளிப்பட்டியலில் இரண்டாம் இடத்தில நீடிக்கிறது. (5-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்.மாநகர சபையின் ஏற்பாட்டில் மாநகரசபையின் 75 ஆவது ஆண்டின் பவளவிழா நேற்று மாநகரசபையின் முன்றலில் யாழ். மாநகர ஆணையாளர் த.ஜெயசீலன் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் நினைவுச் சின்ன விருதுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டன.

(படம்-சிவசாந்தன்)

# சீரற்ற வானிலை காரணமாக 4,432 குடும்பங்கள் பாதிப்பு

(கொழும்பு)

நிலவும் சீரற்ற வானிலை காரணமாக நாடளாவிய ரீதியில் நான்காயிரத்து 432 குடும்பங்களைச் சேர்ந்த 14,700 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அனர்த்த முகாமைத்துவ நிலையம் வெளியிட்டுள்ள புதுப்பிக்கப்பட்ட அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில், கிழக்கு மாகாணத்திலே அதிகளவிலான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக அந்த நிலையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன்படி, கிழக்கு மாகாணத்தில் மூவாயிரத்துத் 811 குடும்பங்களை சேர்ந்த 12,518 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (5-6)

# போதைப் பொருட்களுடன் மூவர் கைது


(சாவகச்சேரி)

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சரசாலைப் பகுதியில் நேற்று முன்தினம் காலை கசிப்பு மற்றும் கஞ்சா போதைப் பொருட்களுடன் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது சரசாலை வடக்கு பகுதியில் வைத்து மூன்று லீற்றர் கசிப்புடன் நெல்லியடிப் பகுதியைச் சேர்ந்த சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டதுடன் மூன்று கிராம் கஞ்சா போதைப்பொருளை உடமையில் வைத்திருந்த குற்றச்சாட்டிலும் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதான நபர்களை நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை சாவகச்சேரிப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (5-6)


## யாழ்.முஸ்லிம் சமூக ஜோதி விருது 2024



யாழ் முஸ்லிம் சமூக ஊடக நிர்வாகி கலாபூஷணம் பரீட் இக்பால் அவர்களின் ஏற்பாட்டில் இரண்டாவது முறையாக வழங்கவிருக்கும் "யாழ் முஸ்லிம் சமூக ஜோதி" விருது 2024 ஆம் ஆண்டுக்கு தெரிவு செய்யப்பட்டவர்கள் சமூகப்பற்றுள்ள கல்வியியலாளர் மஹ்றூப் ஏ.காதர், முன்னாள் யாழ்.மத்திய கல்லூரி, சிறந்த கிரிக்கெட் வீரர் அபூபக்கர் சுல்தான், கவிஞர் யாழ் அஸீம், முன்னாள் யாழ்.முஸ்லிம் விளையாட்டுக் கழக உதைபந்தாட்ட நட்சத்திர கோல்கீப்பர் எம்.எம்.முனாஸ். ஆகிய நால்வரும் ஆவார்கள்.

(சி-8062)

# கரையொதுங்கிய மிதவைக்கலம்



(யாழ்ப்பாணம்)

வடமராட்சி கிழக்கு, கடற்கரைப் பகுதியில் வத்தை வடிவான 18 அடி நீளம் கொண்டதும் 10 அடி அகலம் கொண்ட இனம்தெரியாத மிதவை கலம் ஒன்று கரைக்கு அடித்து வரப்பட்டுள்ளது.

நேற்றுக்காலை கரையொதுங்கிய குறித்த கலத்தை மீனவர்கள் கடும் முயற்சி எடுத்து கரையில் இழுத்து வைத்துள்ளதையடுத்து.

கரையொதுங்கிய குறித்த கலம் தொடர்பில் பொலிஸார் மற்றும் கிராம அலுவலருக்கு தெரியப்படுத்தியதாக அப்பகுதி மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

ஒரு சில நாட்களுக்கு முன்பு வடமராட்சி கிழக்கு உடுத்துறை வேம்படி கடற்கரையிலும் மிதவை ஒன்று கரையொதுங்கி பரபரப்பை ஏற்படுத்தியமையும் குறிப்பிடத்தக்கது. (5-6-33)

# இராசிபலன்

02.01.2024
மார்கழி 17, செவ்வாய்க்கிழமை
சஷ்டி பிற்பகல் 3.59 மணிவரை

பூரம் முற்பகல் 11.03 மணிவரை
சுபநேரம் -11.00-12.30 மணிவரை
இராகுகாலம்-3.30-5.00 மணிவரை

சித்தாமிர்தம்
சந்திராஷ்டமம்
அவிட்டம்.

**வளவன்**

**மேஷம்** புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், வழிபாடு திருப்தி தரும், உதிரி வருமானங்கள் வந்து சேரலாம், தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும்.

**ரிஷபம்** பெற்றோர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், விருந்தினர்களின் சந்திப்புண்டு, சுபவிரயங்கள் கூடும் நாள், வீட்டுத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும்.

**மிதுனம்** ஊக்கத்தோடும் உற்சாகத்தோடும் பணிபுரிவீர்கள், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், உறவினர்கள் நண்பர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும்.

**கடகம்** உங்களின் மனரீதியான யோசனைக்கு நல்ல வரவேற்பு கிடைக்கும், புதிய பொருட்சேர்க்கையுண்டு, தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள்.

**சிம்மம்** திட்டமிட்ட காரியங்களில் திசைதிருப்பங்கள் ஏற்படலாம், ஆழ்ந்த சிந்தனையுண்டு, வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள். ஆரோக்கியத்தில் அக்கறை கூடும் நாள்.

**கன்னி** எடுத்த காரியங்களை நிறைவேற்ற அதிக பிரயாசை காட்ட வேண்டிய நாள், விருந்துகளில் கலந்து கொள்ள அழைப்புகள் வந்து சேரலாம், ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**துலாம்** குடும்பத்தினரிடையே குதூகலம் தரும் சம்பவங்கள் இடம் பெறும், வழிபாட்டில் நம்பிக்கை கூடும் பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், கௌரவமான நாள்.

**விருச்சிகம்** தொழில் வளர்ச்சி கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், சேமிப்பை உயர்த்தும் எண்ணம் உருவாகும், தொட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**தனுசு** வழிபாடு ஆனந்தம் தரும், தித்திக்கும் பயணங்கள் இடம் பெறலாம், எதிர்ப்பாக இருந்தவர்கள் மனம்மாறுவர், பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள்.

**மகரம்** எடுத்த காரியங்களை முடிக்க கடின உழைப்பு தேவை, மற்றவர்கள் மனம் கோணாது நடந்து கொள்வது நல்லது, அலைச்சல்கள் சற்று அதிகரிக்கும்.

**கும்பம்** களஸ்திர சுகமுண்டு, இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, முயற்சிகள் கைகூடும் வாய்ப்புண்டு.

**மீனம்** மற்றவர்களின் பாராட்டுக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு, சாமர்த்தியமாகச் செயற்பட்டு சிறப்புக்களைக் காண்பீர்கள், உடல் நலனில் இருந்த பாதிப்புக்கள் அகலும்.

இரண்டு விடயங்களை நாம் இழந்த பிறகு தான் மதிக்கிறோம் அவை இளமை ,ஆரோக்கியம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள் மீது திணிக்கப்படும் வற் வரி அறவீட்டு முறை

## சிறீதரன் எம்.பி

(கிளிநொச்சி)

**வற் வரி அதிகரிப்பானது மிகவும் பொருளாதார இக்கட்டான நிலையிலுள்ள மக்களை பெரிதும் பாதித்துள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்தார்.**



இது தொடர்பில்அவர் மேலும் தெரிவிக்கையில், மக்களுக்கு வருமானம் இல்லை ,மக்களின் இயல்பான வாழ்க்கை பாதிக்கப்படுகிறது.

அறகலய போராட்டம்போன்ற அரசுக்கு எதிராக மக்கள் கிளர்ந்தெழும் நிலைக்கு வழியேற்படும். சுயமாக மக்களின் நலன்களை பற்றி அரசு சிந்திக்காது சர்வதேச நாணய நிதியத்திற்காகவே செயற்படுகிறது.

தேர்தல் பிரசாரத்திற்கான ஆயத்தமாகவே ஜனாதிபதி வருகை உள்ளது. கடந்த வரவு செலவுத் திட்டத்தில் தேர்தலுக்கு ஆயிரம் மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டது. ஆனால் தேர்தலும் நடைபெறவில்லை.

தமிழ் மக்களின் ஆதரவை எப்படி பெறுவது என்ற நோக்கத்தோடு தான் அவர் வடக்குக்கு வருகிறார் எனவும் தெரிவித்துள்ளார். (5-6)

## வீட்டினை தீயிட்டு கொழுத்திய நபர் பொலிஸரால் கைது



(குருமன்காடு)

வவுனியா, நெடுங்கேணி, 17ஆம் கட்டை பகுதியில் வீட்டினை தீயிட்டு கொழுத்திய நபர் ஒருவரை ஒட்டுசுட்டான் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

குறித்த நபர் அதே பகுதியை சேர்ந்த பெண் ஒருவரை திருமணம் செய்த நிலையில் இருவருக்கும் இடையில் முரண்பாடு ஏற்பட்டமையால் அந்தப்பெண் பிரிந்து தனியாக வசித்து வருகின்றார்.

இந்நிலையில் கைது செய் யப்பட்ட நபர் கடந்த சில நாட்களாக அவரது குடும்பத்தினரையும் அச்சுறுத்தி வருவதாக பெண்ணின் குடும்பத்தினர் நேற்று முன்தினம் ஒட்டுசுட்டான் பொலிஸ் நிலையத்திற்கு சென்று முறைப்பாட்டினையும் பதிவு செய்திருந்தனர்.

இந்நிலையில் குறித்த நபர் மாலை தனது மனைவியின் சகோதரியின் வீட்டுக்கு சென்று வீட்டினை தீயிட்டு எரித்துள்ளதுடன், அங்கிருந்த பொருட்கள் அனைத்தையும்அடித்து நொருக்கியுள்ளார்.

இதனால் வீட்டில் உள்ள பொருட்கள் அனைத்தும் தீயில் எரிந்துள்ளது. இதனையடுத்து ஒட்டுசுட்டான் பொலிஸாரால் அந்நபர் கைது செய்யப்பட்டுள்ளார். இச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.(5-6-250)

## வாள் வெட்டுக்கு இலக்கான நபர்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பருத்தித்துறை ஆதார மருத்துவமனைக்கு முன்பாக இளைஞன் மீது, நேற்றுமுன்தினம் வன்முறை கும்பல் வாள் வெட்டு தாக்குதலை நடத்தியுள்ளது.

துன்னாலை வடக்கைச்சேர்ந்த இளைஞன் படுகாயமடைந்த நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

குறித்த இளைஞன் உணவகத்தில் வேலை செய்து கொண்டிருந்த வேளை உணவகத்தினுள் அத்துமீறி வாள்களுடன் புகுந்தவர்கள் இளைஞன் மீது வாள்வெட்டு தாக்குதலை மேற்கொண்டு விட்டு தப்பி சென்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. சம்பவம் தொடர்பில் பருத்தித்துறை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (5-6-33-60)

## வவுனியாவில் அரிசி பதுக்கல் முற்றுப் பெறாத விசாரணைகள்



(குருமன்காடு)

வவுனியாவில் இந்திய அரசினால் மக்களுக்கு வழங்கப்பட்ட அரிசியில் 1276 கிலோ கிராம் பதுக்கப்பட்டமை தொடர்பான விசாரணையானது இதுவரை முடிவுறாத நிலையில் காணப்படுகின்றமை தொடர்பில் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தினூடாக தெரியவந்துள்ளது.

கடந்தவருடம்டிசம்பர்29ஆம் திகதி இடம்பெற்ற இச் சம்பவம் தொடர்பான விசாரணைகளின் விபரத்தினை வவுனியா பிரதேச செயலகத்தில் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் கேட்கப்பட்டது.

இவ் விடயம் தொடர்பாக வவுனியா பிரதேச செயலாளருக்கு கிராம மக்களால் அறிவிக்கப்பட்ட நிலையில் மாவட்ட செயலக கணக்காய்வு உத்தியோகத்தர்கள், அனர்த்த முகாமைத்துவ பிரிவு உத்தியோகத்தர்கள்,உதவி பிரதேச செயலாளர் தலைமையில் குறித்த பகுதிக்கு சென்று விசாரணைகளை முன்னெடுக்கப்பட்டிருந்தது. (5-6)


## மருந்தியலாளர் வேலைவாய்ப்பு
## PHARMACISTS

மருந்தியலாளர் வேலைவாய்ப்பை பெறுவதற்கான Apprentice Pharmacists விண்ணப்பங்கள் ONLINE மூலம் கோரப்பட்டுள்ளது. இதற்கான நேர்முகப்பரீட்சை 2024 மாசி மாதம் கொழும்பில் நடைபெறுகிறது. 2026 ஆம் ஆண்டு மருந்தியலாளர் பரீட்சையில் சித்தியடைந்தால் 2027 ஆம் ஆண்டு வெளிவாரி மருந்தியலாளராக ரூபா 75000/= சம்பளத்துடன் வேலை செய்யக் கூடியதாக இருக்கும்.

மருந்தியலாளர் பரீட்சைக்கான பயிற்சி வகுப்புக்கள் இம்மாதம் 6ஆம் திகதி தொடக்கம் நேரடி வகுப்புக்கள் (Personal Classes) யாழ்ப்பாணக் கல்லூரி 464, ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணத்தில் நடைபெறும். வெளிமாவட்ட மாணவர்களுக்கான ONLINE ZOOM Classes உம் 06.01.2024 ஆம் திகதி தொடக்கம் சனி, ஞாயிற்றுக்கிழமை இரவு நேரத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

**மேலதிக விபரங்களுக்கு நேரு (Nehru sir)**

**077 316 425**


## 7 1/2 லீற்றர் கசிப்புடன் இருவர் கைது

(கரணவாய்)

துன்னாலை கருக்குட்டு வான் பகுதியில் கடந்த சனிக்கிழமை நெல்லியடிப் பொலிஸார் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின் போது ஏழரை லீற்றர் கசிப்புடன் இரு பெண்கள் கைது செய்யப்பட்டுள்ளதுடன் ஒரு பெண் தப்பியோடியுள்ளார்.

மேற்படி பகுதியில் கசிப்பு விற்பனை இடம்பெறுவதாக நெல்லியடிப் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலை அடுத்து பொலிஸார் அப் பகுதிக்கு சென்றனர். இதன் போது பொலிசாருக்கும் சந்தேக நபர்களுக்கும் இடையில் இழுபறி ஏற்பட பெண் ஒருவர் தப்பிச் சென்றுள்ள நிலையில் இரு பெண்கள் கைது செய்யப்பட்டுள்ளதுடன் ஏழரை லீற்றர் கசிப்பும் மீட்கப்பட்டுள்ளது.

சந்தேக நபர்களை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கையை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (5-6-69)

## சந்தைகளில் நேற்றைய விலை


| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 650 | 700 | 650 | 650 |
| உருளைக்கிழங்கு | 170 | 180 | 150 | 200 |
| பச்சைமிளகாய் | 1400 | 1300 | 1200 | 1000 |
| தக்காளி | 800 | 700 | 900 | 800 |
| மரவள்ளிக்கிழங்கு | 120 | 150 | 120 | 150 |
| கோவா | 450 | 600 | 550 | 600 |
| கரட் | 800 | 1100 | 950 | 1000 |
| பூசணி | 160 | 160 | 180 | 250 |
| புடோல் | 320 | 350 | 240 | 400 |
| வாழைக்காய் | 200 | 240 | 200 | 300 |
| சின்ன வெங்காயம் | 500 | 400 | 450 | 500 |
| பெரிய வெங்காயம் | 450 | 450 | 550 | 500 |
| பாகற்காய் | 800 | 1200 | 800 | 1000 |
| வெண்டக்காய் | 350 | 300 | 250 | 400 |
| கருணைக் கிழங்கு | 120 | 120 | 120 | 200 |
| பயற்றங்காய் | 500 | 400 | 400 | 400 |
| லீக்ஸ் | 450 | 600 | 550 | 600 |
| பீற்றூட் | --- | 700 | 600 | 800 |
| கறிமிளகாய் | 800 | 650 | 700 | 800 |
| முருங்கைக்காய் | --- | --- | --- | --- |
| போஞ்சி | 600 | 500 | 600 | 700 |
| கத்தரிதம்புள்ள | 600 | 400 | 650 | 600 |
| கீரை - 1 பிடி | 150 | 150 | 200 | 250 |
| தேசிக்காய் | 600 | 600 | 350 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 100 | 100 | 70-100 |
| இராசவள்ளி | 800 | 700 | 550 | 600 |
| வெங்காயப்பூ | 900 | 1000 | --- | --- |
| முள்ளங்கி | 200 | 300 | 300 | 400 |
| பொன்னாங்காணி | 100 | 100 | 100 | 60 |
| வல்லாரை | 100 | 40 | 50 | 80 |
| ஈரப்பலா | 100 | 200 | 120 | 200 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# மு/சிறி சுப்பிரமணிய வித்தியாசாலை, புதுக்குடியிருப்பு
# தரம் 5 மாணவர்களுக்கான கௌரவிப்பு விழா-02.01.2024


பி.போஜிதா (புள்ளி-175 )


ஞா.பிரவீனா (புள்ளி-175 )



ம.மிதுன் (புள்ளி-170 )



வா.கரிஸ் (புள்ளி-168 )


ஜெ.கரிஸ்ரன் (புள்ளி-167 )



சு.அஸ்மிகா (புள்ளி-167 )



ஜெ.ஜெனிஸ்ரலா (புள்ளி-166)


ச.ரிஷானி (புள்ளி-164)



ப.அபிலக்ஷன் (புள்ளி-162)



சு.டஸ்மிகா (புள்ளி-161)



செ.வர்சிகா (புள்ளி-158)


ஜெ.கோபிதன் (புள்ளி-156)


த.டிலைக்சிகா (புள்ளி-156 )


ர.மகிழ்னி (புள்ளி-155)



ல.யுகராஜ் (புள்ளி-154)



நி.தர்ஷாந் (புள்ளி-154 )



அ.வஸ்மினா (புள்ளி-154)


பி.சிவந்திகன் (புள்ளி-153)



க.டிசாலிகா (புள்ளி-153)



அ.அருள்நிலவன் (புள்ளி-151)


ற.திவ்வியா (புள்ளி-150)



க.கேதாரணி (புள்ளி-150)



ஜோ.யூலியன் (புள்ளி-149 )


ம.கேமராஜ் (புள்ளி-149 )


ந.ஜெனிதன் (புள்ளி-149 )


அ.நிலுக்சியா (புள்ளி-148)


சு.அபிஷா (புள்ளி-147)


ஜெ.மிதுனன் (புள்ளி-145 )


சு.லேகிஷா (புள்ளி-145 )

(18422)

மாகாணமட்ட தமிழ் மொழித்திறன் போட்டி


த.டிலைக்சிகா
பாவோதல்
இரண்டாம் இடம்


கே.யோபிதன்
பேச்சு
3 ஆம் இடம்

இம் மாணவர்களுக்கு ஆக்கமும் ஊக்கமும் வழங்கி சாதனையாளர்களாக்கி நல்வழிப்படுத்திய அதிபர், உப அதிபர் மற்றும் ஆசிரியர்களுக்கும் அகமகிழ்ந்து பாராட்டுவதுடன் மேலும் மு/சிறிசுப்பிரமணிய வித்தியாசாலை மென்மேலும் வளர்ச்சி பெறவும், மாணவர்கள் கல்வியில் உயர்ந்து மேலும் பல சாதனைகள் படைக்கவும் எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**பாடசாலைச் சமூகம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்


## வெற்றிகரமாக விண்ணுக்கு ஏவப்பட்ட இஸ்ரோவின் புதிய விண்கலம்

(டில்லி)

இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமான இஸ்ரோ தனது நாட்டின் முதல் எக்ஸ்-ரேபோலரி மெட்ரி செயற்கைக்கோளை வெற்றிகரமாக விண்ணில் செலுத்தியுள்ளது.

இந்த விண்கலம் ஆந்திராவின் ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ் தவான் விண்வெளி மையத்தில் இருந்து நேற்று காலை 9.10 மணிக்கு ஏவப்பட்டது.

இந்திய விண்வெளித் துறையின் சந்திரயான்-3 மற்றும் ஆதித்யா எல்1 பயணத்திற்குப் பிறகு இது நாட்டின் விண்வெளி ஆய்வுக் கான அடுத்த திட்டமாகும்.



இந்த விண்கலமானது விண்மீன் மண்டலத்தில் உள்ள கருந்துளைகள் மற்றும் நியூட்ரான் நட்சத்திரங்களை ஆய்வு செய்வதற்காக அனுப்பப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவிற்கு அடுத்தபடியாக இந்தியா அனுப்பும் உலகின் இரண்டாவது விண்கலம் இது என்பது குறிப்பிடத்தக்கது. (5-6)

## புத்தாண்டை முதலாவதாக வரவேற்ற நியூசிலாந்து

(வெலிங்டன்)

புத்தாண்டை வரவேற்ற உலகின் முதலாவது நாடாக நியூசிலாந்து விளங்குகின்றது.

அந்தவகையிலே, நியூசிலாந்தில் புத்தாண்டு பிறந்ததையொட்டி அந்நாட்டில் கண்கவர் வானவேடிக்கை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. உலகின் கிழக்கு திசையின் இறுதிப்பகுதியில் அவுஸ்திரேலியா, ஓசியானா கண்டத்தில் பசிபிக் பெருங்கடல் பகுதியில் நியூசிலாந்து நாடு அமைந்துள்ளது.

இதனால் உலகில் முதலாவதாக சூரியன் உதிக்கும் நாடாகவும் நியூசிலாந்து விளங்குகின்றது. அதன்படி இலங்கை நேரப்படி நேற்று முன்தினம் மாலை 4.30 மணியளவில் நியூசிலாந்து நாட்டில் உள்ள ஆக்லாந்தில், நள்ளிரவு 12 மணி ஆனவுடன் அந்நாட்டு மக்கள் ஆட்டம், பாட்டம், வான வேடிக்கை என கோலாகலமாக புத்தாண்டை வரவேற்றுள்ளனர். (5-6)





## ஜப்பானில் 7.5 ரிக்டர் அளவில் நிலநடுக்கம்

### சுனாமி எச்சரிக்கை

(டோக்கியோ)

ஜப்பானின் வடகிழக்கு பகுதியில் 7.5 ரிக்டர் அளவில் நிலநடுக்கம் ஏற்பட்டதை அடுத்து சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

வடக்கு, மத்திய ஜப்பானில் நேற்று 7.5 ரிக்டர் அளவிலான நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன. சக்தி வாய்ந்த நிலநடுக்கத்தைத் தொடர்ந்து இஷி காவா, நிகட்டா மற்றும் டொயாமா ஆகிய கடலோரா மாகாண பகுதிகளுக்கு ஜப்பான் வானிலை ஆய்வுமையம், சுனாமி எச்சரிக்கை விடுத்துள்ளது.

இப்பகுதிகளில் 5 மீற்றர் உயரம் வரை அலைகள் எழும்ப வாய்ப்பு உள்ளதாக ஜப்பான் ஒளிபரப்பு கழகம் கணித்துள்ளது. (5-6)

## தாக்குதலுக்கு பதில் தாக்குதல் நடத்திய ரஷ்ய இராணுவம்

### 28 பேர் பலி



(மொஸ்கோ)

உக்ரைனின் கார்கீவ் நகரம் மீது ரஷ்யாவின் ட்ரோன் படைகளால் சுற்றிவளைத்து தாக்குதல் நடத்தப்பட்டதில் 28 பேர் உயிரிழந்துள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

முன்னதாக ரஷ்யாவின் பெல்கோரோட் நகரம் மீது உக்ரைன் நடத்திய தாக்குதலில் பலி எண்ணிக்கை 24 ஆக உயர்ந்துள்ளதாகவும் 108 பேர் காயங்களுடன் தப்பியதாகவும் 37 தொகுப்பு குடியிருப்புகளும் சேதமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

அதற்கு பழிவாங்கும் வகையிலேயே ரஷ்யா உக்ரைனின் கார்கீவ் நகரத்தை சுற்றிவளைத்து தாக்குதல் நடத்தியதில் இதுவரை 28 பேர் பலியாகியுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

மேலும் ரஷ்யா, உக்ரைனின் குடியிருப்பு வளாகங்கள், உணவகங்கள் மற்றும் மருத்துவமனைகள் மீதும் தாக்குதல் மேற்கொண்டுள்ளது.

அத்துடன், பொதுமக்கள் குடியிருக்கும் பகுதிகளை குறிவைத்து ரஷ்யா தாக்குதல் நடத்தி வருவதாக உக்ரைன் பாராளுமன்ற உறுப்பினர் லெசியா வாசிலைன்கோ குற்றஞ்சாட்டியுள்ளார்.

அவர் தொடர்ந்தும் தெரிவிக்கையில், தங்களுக்கு ஆயுதம் வழங்குபவர்கள், இந்த போர் முடிவுக்கு வரும் வரையில் ஆயுத உதவிகள் வழங்குவோம் என்று உத்தரவாதம் அளிக்க வேண்டும் எனவும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

அதேவேளை, ரஷ்யாவின் பாதுகாப்பு அமைச்சர், ரஷ்யாவின் பெல்கோரோட் நகரத்தின் மீதான தாக்குதலுக்கு தாம் பழிவாங்கியுள்ளதாக தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (5-6)

## செங்கடலில் ஹவு... அமெரிக்கா வான்...

(வோஷிங்டன்)

செங்கடல் பகுதியில் சரக்கு கப்பலொன்றை கைப்பற்ற முயன்ற ஹவுதிக் கிளர்ச்சியாளர்களின் படகுகள் மீது அமெரிக்க ஹெலிகொப்டர்கள் தாக்குதலை மேற்கொண்டு அவற்றை அழித்துள்ளதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

சரக்கு கப்பலொன்றின் மீது தாக்குதலை மேற்கொண்டவாறு ஹவுதி கிளர்ச்சியாளர்களின் நான்கு படகுகள் அந்த கப்பலை கைப்பற்ற அருகில் நெருங்கி சென்றன என அமெரிக்க இராணுவம் தெரிவித்துள்ளது.

அவசர அழைப்பை செவிமடுத்த அமெரிக்க போர்க்கப்பல்களில் இருந்து ஹெலிகொப்டர்கள் உதவிக்கு விரைந்தன. மூன்று படகுகள் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.



மூன்று படகுகள் மூழ்கடிக்கப்பட்டன. அவற்றிலிருந்தவர்கள் கொல்லப்பட்டனர் என அமெரிக்க கடற்படை தெரிவித்துள்ளது. நான்காவது படகு தப்பிச் சென்று விட்டது என அமெரிக்க கடற்படை தெரிவித்துள்ளது. இதேவேளை தங்களின் எச்சரிக்கையை குறிப்பிட்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அழுத்தம் தொடர்ந்தாலும்
# பிரதமர் பதவியில் இருந்து ஒருபோதும் விலகமாட்டேன்
## நெதன்யாகு அதிரடி



(ஜெருசலேம்)

**பிரதமர் பதவியில் இருந்து விலகுமாறு நெதன்யாகு மீது இஸ்ரேலில் தொடர்ந்து அழுத்தம் பிரயோகிக்கப்பட்டுவரும் நிலையில் அவர் பதவி விலக போவதில்லை என தெளிவுபடுத்தியுள்ளார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

"நான் பல ஆண்டுகளாக இஸ்ரேலை வழிநடத்தி வருகிறேன், நான் பிரதமராக இருந்த காலத்தில் இஸ்ரேல் பலமாகி விட்டது.

காஸாவில் முழுமையான வெற்றியைப் பெற இன்னும் கால அவகாசம் தேவை.

முடிந்தவரை நமது இராணுவ வீரர்களின் உயிரை பாதுகாத்து கொண்டே முன்னேறி வருகிறோம். எங்கள் நடவடிக்கைகளில் 8,000இற்கும் மேற்பட்ட பயங்கரவாதிகள் கொல்லப்பட்டனர். மற்றும் ஹமாஸின் இராணுவ திறன்கள் பெருமளவில் அழிக்கப் படுகின்றன."


காசா இராணுவ மயமாக்கப்படுவதை உறுதி செய்வதற்காக, யுத்தம் முடிவடைந்த பின்னரும் நான் ஆட்சியில் நீடிக்க விரும்புகிறேன்.

பணயக்கைதிகளை விடுவிப்பதற்காக, "ஹமாஸ் பல நிபந்தனைகளை விதித்துள்ளது, அதை நாங்கள் ஏற்க வில்லை.

அதன் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் சாத்தியமானதாக இருந்தால் மட்டுமே ஒப்பந்தம் சாத்தியமாகும். இந்த பிரச்சினையில் ஒரு இயக்கம் உருவாகும் சாத்தியத்தை நாங்கள் காண்கிறோம். ஆனால் தவறான வழியில் எதிர்பார்ப்புகளை எழுப்ப விரும்பவில்லை.

நாங்கள் எங்கள் முயற்சிகளை தொடர்வோம். ஆனால் ஹமாஸின் சட்ட விரோதமான நிபந்தனைகளை ஏற்க மாட்டோம்." என தெரிவித்துள்ளார். (5-6)

# வுதிப் படகுகள் மீது ன்வழித் தாக்குதல்



வர்த்தக கப்பல் செவிமடுக்க மறுத்தது என தெரிவித்துள்ள ஹவுதிக் கிளர்ச்சியாளர்கள் தங்களின் அமைப்பை சேர்ந்த 10 பேர் கொல்லப்பட்டுள்ளனர் எனவும் தெரிவித்துள்ளது.

நவம்பர் மாதம் முதல் ஹவுதி கிளர்ச்சியாளர்கள் செங்கடலில் கப்பல்கள் மீது தாக்குதல்களை மேற்கொண்டு வருகின்றனர். இதுவரையில் 100 இற்கும் மேற்பட்ட ஆளில்லா விமானதாக்குதல்களையும் ஏவுகணை தாக்குதல்களையும் மேற்கொண்டுள்ளனர்.

# இதயத்தை செயலிழக்க வைக்கும் JN-1 கொரோனா வைரஸ்
## ஜப்பான் ஆய்வாளர்கள் எச்சரிக்கை

(டோக்கியோ)

உலகம் முழுவதும் இப்போது புதிதாகப் பரவிவரும் JN-I கொரோனா வைரஸ் பாதிப்பு காரணமாக இதய செயலிழப் புகள் அதிகரிக்கக் கூடும் என ஜப்பான் ஆய்வாளர்கள் எச்சரித்துள்ளனர்.

உலகம் முழுவதும் பல்வேறு நாடுகளிலும் கொரோனா பாதிப்பு மீண்டும் அதிகரிக்கத் தொடங்கியுள்ளது. ஒமிக்ரோன் பாதிப்பில் இருந்து தான் இந்த JN-I வேரியண்ட் உருவாகியுள்ளது.

அமெரிக்காவில் கடந்த செப் டெம்பர் மாதம் இந்த புது வகை கொரோனா பாதிப்பு கண்டறியப்பட்டது.



இந்தபுதிய JN-I கொரோனா காரணமாக கடந்த சில வாரங்களாக அமெரிக்கா, பிரிட்டன், சீனா மற்றும் இந்தியா உள்ளிட்ட பல நாடுகளில் கொரோனா பாதிப்பு அதிகரித்துள்ளது. இதற்கிடையே கொரோனா பாதிப்பு ஏற்பட்டவர்களுக்கு இதய பாதிப்புகள் ஏற்பட வாய்ப்பு உள்ளதாக சுகாதார வல்லுநர்கள் எச்சரித்துள்ளனர். (5-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சனிப்பெயர்ச்சிப் பலன்கள்

### அவிட்டம்3,4ஆம்பாதம் முயற்சிதள்ளிப்போகும்

தைரிய, வீரிய, பராக்கிரமக்காரகன் எனப்படும் செவ்வாய் பகவான் நட்சத்திரத்தில் நீங்கள் பிறந்திருந்தாலும் முதல் இரண்டு பாதங்களில் பிறந்தவர்களுக்கு மகரமும், 3,4 ஆம் பாதங்களில் பிறந்தவர்களுக்கு கும்பமும் ராசிகளாகவும், சனிபகவானே ராசிநாதனாகவும் உள்ளார்.

செவ்வாய், சனியின் அம்சத்தில் நீங்கள் பிறந்தாலும் கோச்சார ரீதியாக சனிபகவான் சஞ்சரிக்கும் காலங்களில் அவர் சஞ்சரிக்கும் இடத்திற்கேற்ப பலன்களை கர்ம வினைக்கேற்ப வழங்கக் கூடியவராகிறார். அவிட்டம்1, 2ஆம் பாதங்களில் பிறந்தவர்களுக்கு பாத சனியாகவும், 3, 4 ம் பாதங்களில் பிறந்தவர்களுக்கு ஜென்ம சனியாகவும் சஞ்சரிக்கிறார்.

இதனால் 3, 4 ம் பாதங்களில் பிறந்தவர்களுக்கு உடல்நலனில் பாதிப்பு, உறவினர்களால் சங்கடம், வெளியூரில் வசிக்க வேண்டிய நிலை, வீண்சங்கடங்கள், நண்பர்களை விலகிச்செல்லும் நிலை, பெண்களுக்கு கர்ப்பப்பையில் பிரச்சினை, வருமானத்தில் தடைகளை உண்டாக்குவார். இவையெல்லாம் சனி பகவான் நேர்கதியில் சஞ்சரிக்கும் காலத்திற்குரிய பொதுப்பலன்கள்.

#### அதிர்ஷ்ட காலம்

சதயம் நட்சத்திரத்தில் சஞ்சரிக்கும் காலமான மார்ச் 16, 2024 - ஜூன் 19, 2024 வரையிலும், நவ 4.2024 - பிப் 27, 2025 வரையிலும், சனி அஸ்தமனம், வக்கிர காலங்களிலும் 4 பாதங்களில் பிறந்தவர்களுக்கும் சங்கடங்களில் இருந்து விடுதலையை வழங்குவார் சனிபகவான். இக்காலத்தில் நீங்கள் நினைத்ததை எல்லாம் நடத்திக்கொள்ள முடியும். குடும்பம், தொழில், உத்தியோகம் போன்றவற்றில் நன்மை அதிகரிக்கும். பணவரவில் இருந்த தடைகள் விலகும். உடல்நிலை சீராகும்.

#### ராகு - கேது சஞ்சாரம்

ஏப் 26, 2025 வரை ராகு மீனத்திலும், கேது கன்னியிலும் சஞ்சரிக்கும் நிலையில் 3,4ம் பாதத்தினருக்கு ஏப்.26.2025 வரை ராகு 2ஆம் இடத்திலும், கேது 8ஆம் இடத்திலும் சஞ்சரிக்கும் நிலையில் வீண் பிரச்சினைகள் அதிகரிக்கும். தொழிலில் சங்கடங்கள் உண்டாகும். உடல் நிலை, பணியில் பிரச்சினைகள் ஏற்படும். வசிக்கும் ஊரை விட்டு வெளியூர் சென்று வாழ வேண்டிய நிலையும், குடும்பத்தில் நெருக்கடியும் தோன்றும். ஏப்.26, 2025இற்கு பிறகும் எதிர்மறையான பலன்களே ஏற்படும். தொழிலில் நெருக்கடி, பணியில் பிரச்சினை, குடும்பத்தில் சங்கடம், எதிர்பாலினரால் அவமானம், வீண்பழி போன்றவற்றை சந்திக்க நேரிடும்.

#### குரு சஞ்சாரம்

அவிட்டம் 3,4ஆம் பாதங்களில் பிறந்தவர்களுக்கு மே14, 2025 வரை குரு பகவானால் நன்மை வழங்க இயலாது என்றாலும், அதன் பிறகு 5ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் குருபகவான், எல்லா வித நெருக்கடிகளையும் விலக்கி வைப்பார். பணவரவை அதிகரிப்பார். செல்வாக்கை உயர்த்துவார். பிரச்சினைகள், வம்பு வழக்குகள் என்பதிலிருந்து சாதகமான நிலையை வழங்குவார். குடும்பத்தில் சுபநிகழ்ச்சிகளை நடத்தி வைப்பார். செல்வாக்கை உயர்த்துவார்.

#### பொதுப்பலன்

அவிட்டம் 3,4ஆம் பாதங்களில் பிறந்தவர்களுக்கு ஏழரைச் சனியும், ராகு கேதுக்களின் சஞ்சாரமும் எதிர்மறை பலன்களையே ஏற்படுத்தும் என்பதால் இக்காலத்தில் செயல்களில் நிதானம் தேவை. புதிய முயற்சிகளில் கவனமுடன் ஈடுபட வேண்டும். அறிமுகம் இல்லாத நபர்களை நம்பி எந்தவொரு செயலிலும் இக்காலத்தில் இறங்க வேண்டாம். வாகன இயக்கத்திலும், இயந்திரப் பணியிலும் எச்சரிக்கை அவசியம்.

#### தொழில்

அவிட்டம் 3,4ஆம் பாதங்களில் பிறந்தவர்கள் எச்சரிக்கையுடன் செயற்பட வேண்டும். தொழிலிலும் போட்டி அதிகரிக்கும். மே 1, 2025இற்கு பிறகு புதிய தொழில் தொடங்கும் முயற்சியை மேற்கொள்ளலாம்.

#### கல்வி

முதல் இரண்டு பாதங்களில் பிறந்தவர்கள் படிப்பில் கவனம் செலுத்துவர். ஆசிரியர்களின் அறிவுரைகளை ஏற்று செயற்பட்டு எதிர்பார்த்த மதிப்பெண்களுடன் தேர்வில் வெற்றி பெறுவீர்கள். 3,4 ஆம் பாதங்களில் பிறந்தவர்களுக்கு எதிர்பாராத சங்கடம் நெருக்கடிகள் உண்டாகும் என்பதால் படிப்பில் கவனம் சிதறுவதற்கு வாய்ப்புண்டு. படிப்பில் மட்டும் முழுமையாக கவனம் செலுத்தினால் மட்டுமே தேர்வில் வெற்றிபெற முடியும்.

பரிகாரம் - குல தெய்வத்தை தினமும் வழிபட்டு வர சங்கடங்கள் மறையும்.

### சதயம் நெருக்கடி அதிகரிக்கும்

யோகக்காரகன், போகக்காரகன் எனப்படும் ராகு பகவான், ஆயுள், கர்மகாரகனான சனி பகவான் அம்சத்தில் பிறந்திருக்கும் உங்களுக்கு டிசெ.20, 2023 முதல் உங்கள் ராசிக்குள் ஜென்ம சனியாக சஞ்சரிக்கப் போகிறார் சனிபகவான்.

உங்கள் ராசிக்கு சனி பகவானே அதிபதி என்றாலும் அவர் சஞ்சரிக்கும் இடத்திற்குரிய பலன்களை அவரவரின் கர்மவினைக்கேற்ப வழங்க வேண்டியவராகிறார்.

ஜென்ம ராசிக்குள் சனிபகவான் சஞ்சரிக்கும் போது ஆரோக்கியத்தில் சங்கடம் ஏற்படும். செயற்படமுடியாத அளவிற்கு நெருக்கடிகள் தோன்றும். வருமானத்தில் தடை உண்டாகும். கூட்டாளிகள் பிரிந்து சென்று தனித்து செயற்படுவர். மனதில் இனம் புரியாத பயம் உண்டாகும். நண்பர்களும் உறவினர்களும் எதிரியாக மாறுவர். குடும்பத்திலும் நிம்மதியான நிலை இருக்காது என்பது பொதுவான விதியாகும். இந்த நேரத்தில் மற்ற கிரகங்களின் சஞ்சார நிலைகளும், உங்கள் சுய ஜாதகத்தில் கிரகங்கள் அமர்ந்துள்ள நிலையும், நடைபெற்று வரும் திசாபுத்தியும் இந்த சங்கடங்களில் இருந்து உங்களைப் பாதுகாக்கும்.

#### அதிர்ஷ்ட காலம்

சனி பகவான் அவிட்டம் நட்சத்திரத்தில் சஞ்சரிக்கும் காலமான டிசெ.20, 2023 - பிப் 15, 2024 வரையிலும், பூரட்டாதி நட்சத்திரத்தில் சஞ்சரிக்கும் காலமான மார்ச் 29, 2025 - ஜூலை 2, 2025 வரையிலும் மற்றும் நவ 17, 2025 - மார்ச் 6, 2026 வரையிலும் சனி பகவானின் அஸ்தமன, வக்கிர காலங்களிலும் உண்டாகும் பலன்கள் சற்று மாறுபடும். இக்கால கட்டத்தில் முயற்சிகள் வெற்றியாகும். வருமானம் அதிகரிக்கும். தொழிலில் இருந்த தடைகள் விலகும். நன்மைகள் அதிகரிக்கும். செயல்களில் ஆதாயம் ஏற்படும். நெருக்கடியில் இருந்து விடுபடுவீர்கள்.

#### ராகு - கேது சஞ்சாரம்

ஏப் 26, 2025 வரை ராகு மீனத்திலும், கேது கன்னியிலும் சஞ்சரிக்கும் நிலையும், ஏப்ரல் 26, 2025 முதல் ராகு உங்கள் ஜென்மராசியிலும், கேது 7ஆம் இடத்திலும் சஞ்சரிக்கும் நிலையும் எதிர்பாராத சங்கடங்களை ஏற்படுத்தும். தேவையற்ற பிரச்சினைகளால் நெருக்கடி அதிகரிக்கும். அந்நியர்களால் சிக்கல்களுக்கு ஆளாவீர்கள். குடும்பத்தில் குழப்பம் அதிகரிக்கும். சிலருக்கு வெளியூரில் சென்று வசிக்கும் நிலை ஏற்படும். பொருளாதார நிலை என்பது கேள்விக்குறியாகும். வழக்குகளில் எதிர்மறையான பலன்கள் ஏற்படும். நேர்மையின்றி குறுக்கு வழிகளை பின்பற்றி வழக்குகளில் சிக்கும் நிலையும் சிலருக்கு ஏற்படும்.

#### குரு சஞ்சாரம்

ஏப் 30, 2024 வரை 3ஆம் இடமான தைரிய, வீரிய ஸ்தானத்திலும், மே 1, 2024 - மே 13, 2025 வரை சுகஸ்தானத்திலும், மே 14, 2025 முதல் 5ம் ஸ்தானத்திலும் சஞ்சரிக்கும் குரு பகவான், மே 13, 2025 வரை உங்களுக்கு பாதகமான பலன்களை வழங்குவார். சங்கடங்கள் அதிகரிக்கும். எதிர்பார்ப்பு நிறைவேறாமல் போகும். உங்கள் புத்திசாலித்தனம் இக்காலத்தில் பயன்படாமல் போகும். மற்றவர்களுக்கு பதில் சொல்லும் நிலையும், உடலிலும் மனதிலும் சங்கடங்களும் உண்டாகும். மே 14, 2025 முதல் உங்கள் நிலையில் மாற்றம் உண்டாகும். அதுவரையில் இருந்த சங்கடங்கள் விலக ஆரம்பிக்கும். செல்வாக்கு உயரும். பணவரவு அதிகரிக்கும். தொழிலில் இருந்த தடைகள் விலகும். வியாபாரத்தில் லாபம் தோன்றும். பணியாளர்களின் பிரச்சினைகள் விலக ஆரம்பிக்கும். குடும்பத்தில் சுபநிகழ்ச்சிகள் நடை பெறும். அரசியல், பொது வாழ்க்கையில் இருப்பவர்களின் அந்தஸ்து உயரும்.

#### பொதுப்பலன்

இக்காலத்தில் ஜென்ம சனியும், ராகு கேதுக்களின் சஞ்சார நிலைகளும், மே 13, 2025 வரை குருவின் சஞ்சார நிலைகளும் சாதகமாக இல்லை என்பதால் செயல்களில் கவனம் அவசியம். மற்றவர்களின் ஆலோசனைகளை ஒரு முறைக்கு நூறு முறை யோசித்து அதன் பிறகே முடிவிற்கு வருவது நன்மையாக இருக்கும். புதிய ஒப்பந்தங்கள் இக்காலத்தில் வேண்டாம். பத்திரங்களில் கையெழுத்திடுவதாக இருந் தால் நன்றாக யோசித்து கையெழுத்திடு வதால் சிக்கல்கள் ஏற்படாமல் போகும். அதிகபட்சமான ஆசைகளுக்கு ஆட்பட்டு குறுக்கு வழியில் செல்பவர்களுக்கு மிகப் பெரிய நெருக்கடிகள் தோன்றும். அறிமுக மில்லாத நபர்களை நம்பி எந்தவொரு செய லிலும் ஈடுபட வேண்டாம். குடும்பத்தில் முடி ந்தவரை அமைதியாக செல்வது நல்லது.




20.12.2023-06.03.2026

#### பணியாளர்கள்

பணிபுரியும் இடத்தில் உழைப்பு அதிகரிக்கும். வருமானம் எதிர்பார்த்த அளவிற்கு இல்லாமல் போகும் சிலருக்கு இடமாற்றம் ஏற்படும். பணியில் முழுமையான கவனம் இருந்தால் மட்டுமே வேலையை உங்களால் தக்க வைக்க முடியும். பணியாளர்களிடம் மேலதிகாரிகள் கண்டிப்பாக நடந்து கொள்வர். சக ஊழியர்கள் உங்களுக்கு ஆதரவாக இருப்பர்.

#### கல்வி

ஆசிரியர்களின் ஆலோசனைகளை ஏற்று செயற்பட வேண்டிய காலமிது. படிப் பில் முழுக்கவனத்தையும் செலுத்துவதால் எதிர்பார்த்த மதிப்பெண் பெற முடியும். விளையாட்டு பொழுதுபோக்கு போன்றவற்றை பொதுத்தேர்வு வரையில் ஒத்தி வைப்பது நன்மை தரும்.

பரிகாரம் அனுமன் கோயில்களை தரிசிப்பது நலமளிக்கும்.

### பூரட்டாதி 1,2,3 ஆம் பாதம் செலவு அதிகரிக்கும்

தனக்காரகன், புத்திரக்காரகன் எனப்படும் குருபகவான் நட்சத்திரத்தில் பிறந்திருந்தாலும், முதல் மூன்று பாதங்களில் பிறந்தவர்களுக்கு ஆயுள், கர்மகாரகனான சனிபகவான் ராசிநாதனாகவும், 4ம் பாதத்தில் பிறந்தவர்களுக்கு உங்கள் நட்சத்திர நாதனே ராசிநாதனாகவும் உள்ளனர்.

கோச்சார ரீதியாக சனி பகவான் சஞ்சரிக்கும் காலங்களில் அவர் சஞ்சரிக்கும் இடத்திற்கேற்ப பலன்களை அவரவரின் கர்ம வினைகளுக்கேற்ப வழங்கக் கூடியவராகிறார்.

பூரட்டாதி முதல் மூன்று பாதங்களில் பிறந்தவர்களுக்கு ஜென்ம சனியாகவும், 4 ஆம் பாதத்தில் பிறந்தவர்களுக்கு விரயச் சனியாகவும் சஞ்சரிக்கிறார். இதனால் முதல் மூன்று பாதங்களில் பிறந்தவர்க ளுக்கு எதிர்பாராத நெருக்கடிகள், தொழில், பணிக ளில் பிரச்சினைகளும், மனதில் குழப்பம், வாழ்க்கைத்துணையுடன்சங்கடமும்ஏற்படும்.

#### அதிர்ஷ்ட காலம்

சனி பகவான் அவிட்டம் நட்சத்திரத்தில் சஞ்சரிக்கும் காலமான டிசெ 20, 2023 - பெப் 15, 2024 வரையிலும், சதயம் நட்சத்திரத்தில் சஞ்சரிக்கும் காலமான மார்ச் 16, 2024 - ஜூன் 19, 2024 வரையிலும், நவ. 4, 2024 - பிப் 27, 2025 வரையிலும், அஸ்தமனம், வக்கிர காலங்களிலும் சங்கடங்களில் இருந்து உங் களை விடுவிப்பார். எதிர்பார்த்த நன்மைகளை உங்களால் அடைய முடி யும். முயற்சிகள் யாவும் வெற்றியாகும். வருமானத்தில் இருந்த தடைகள் விலகும். குடும்பத்தில் அமைதியான நிலை ஏற்படும். உறவினர்களுடன் அனுசரித்துச் செல்வீர்கள். தொழில், வியாபாரத்தில் ஆதாயம் உண்டாகும்.

#### ராகு - கேது பெயர்ச்சி

ஏப் 26, 2025 வரை ராகு மீனத்திலும், கேது கன்னியிலும் சஞ்சரிக்கும் நிலையில் முதல் மூன்று பாதங்களில் பிறந் தவரகளுக்கு 2ஆம் இடத்தில் ராகு, 8ஆம் இடத்தில் கேது சஞ்சரிப்பதால் குடும்பத்தில் பிரச்சினை, தொழிலில் பாதிப்பு, வருமானத்தில் குறைபாடு, வீண் அலைச்சல், செயல்களில் தடைகள், பொருளாதார நெருக்கடி, உடல் நிலையில் சங்கடம், எதிர்பாராத விபத்துகள் உண்டாகும். நோய்த்தொல்லை அதிகரிக்கும். ஏப்.26, 2025 இற்கு பிறகு 1,2,3ஆம் பாதங்களில் பிறந்தவர்களுக்கு ஜென்ம ராசிக்குள் ராகுவும், 7இல் கேதுவும் சஞ்சரிப்பதால் நெருக்கடி அதிகரிக்கும். குடும்பம், தொழில், பணி போன்றவற்றில்பிரச்சினைகள்ஏற்படும்.

#### குரு சஞ்சாரம்

பூரட்டாதி 1,2,3 ஆம் பாதங்களில் பிறந்தவர்களுக்கு ஏப். 30.2024 வரை 3ஆம் ஸ்தானத்திலும், மே 1, 2024 - மே 13, 2025 வரை 4ஆம் ஸ்தானத்திலும், மே 14, 2025 முதல் 5ஆம் ஸ்தானத்திலும் சஞ்சரிக்கும் குரு பகவான், மே 13 வரை எதிர்மறையான பலன்களையே வழங்குவார். முயற்சிகள் இழுபறியாவதுடன் வருமானத்திலும் தடையுண்டாகும். மே 14, 2025 இற்கு பிறகு நிலைமை சீராகும். முயற்சிகள் வெற்றியாகும். குடும்பத்தில் சுபநிகழ்ச்சிகள் நடந்தேறும்.

#### பொதுப்பலன்

இக்காலத்தில் செயல்களில் நிதானம் அவசியம். முயற்சி இழுபறியாகும். உடல் நலனில் பின்னடைவு உண்டாகும். செலவு அதிகரிக்கும். குடும்பத்திலும் சின்னச் சின்ன பிரச்சினைகள் ஏற்படும். வரவேண்டிய பணம் வருவதற்கு தாமதமாகும். தொழில், வியாபாரம் போன்றவற்றில் எதிர்பார்த்த வருமானம் இல்லாமல் மனம் குழப்பமடையும். வீண் செலவு அதிகரிக்கும். கூட்டுத் தொழிலில் பிரச்சினைகள் ஏற்பட்டு உங்களை சங்கடப்படுத்தும்.

#### தொழில்

தொழிலில் உழைப்பு அதிகரிக்கும். திட்டமிட்ட முயற்சிகள் லாபமாகும். விற்பனையில் கூடுதல் கவனம் தேவைப்படும். ஊழியர்களை நம்பி எந்தவொரு பொறுப்பையும் இக்காலத்தில் ஒப்படைக்க வேணடாம். அதனால் எதிர்மறையான பலன்களே உண்டாகும். எல்லாவற்றிலும் உங்கள் நேரடி கண்காணிப்பு இக்காலத்தில் அவசியம்.

#### கல்வி

படிப்பில் கூடுதல் கவனம் செலுத்துவது அவசியம். ஆசிரியர்கள் அறிவுரைகளை பின்பற்றுவது நன்மையளிக்கும். விடா முயற்சி மட்டுமே நீங்கள் எதிர்பார்த்த மதிப்பெண்களை பொதுத் தேர்வில் வழங்கும் என்பதால் மற்ற செயல்களில் கவனம் செலுத்தாமல் படிப்பது மிக அவசியம்.

#### உடல்நிலை

திடீர் திடீரென உடலில் சங்கடம் தோன்றும். இதுநாள் வரை மறைந்திருந்த நோய்கள் இப்பொழுது தலைகாட்டும். சிலர் விபத்துகளிலும் சிக்க நேரும் என்பதால் பயணத்தில் எச்சரிக்கை அவசியம். நோயின் தாக்கம் ஆரம்பிக்கும்போதே மருத்துவ சிகிச்சை எடுத்துக் கொள்வது நலம் அளிக்கும்.

#### குடும்பம்

குடும்பத்தில் ஒரு நேரம் இருப்பதுபோல் மறு நேரம் நிம்மதி இல்லாமல் போகும். எதிர்பார்ப்புகள் இழுபறியாகும். தம்பதியர் இடையே சச்சரவு ஏற்படும். ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்து செல்வதால் நிம்மதி உண்டாகும். ஆடம்பர செலவு, வீண் பயணங்களை தவிர்ப்பது நல்லது. புதிய நபர்களை இக்காலத்தில் வீட்டிற்குள் அனுமதிக்க வேண்டாம்.

பரிகாரம் பைரவர், வராகி வழிபாடு செய்வதுடன் உணவு, உடை தானம் செய்வதால் நன்மை அதிகரிக்கும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் இசையுலகின் உச்சமான பேராசான் ஏ.கே.கருணாகரன் ;

## முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன் புகழாரம்



சங்கீதவித்துவான்கருணாகரனின் முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலியும் திருவுருவச்சிலை திறப்பு வைபவமும் அவர் பிறந்த இடமான கரணவாய் கிழக்கு, கரவெட்டியில் ஓய்வு நிலை ஆசிரியர் இ.கருணாகரன் தலைமையில் அண்மையில் இடம்பெற்றது. பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் கலாநிதி என் சண் முகலிங்கன் கலந்து சிறப்பித்து திருவுருவச் சிலையை திறந்து வைத்தார்.

திருமதி வசந்தகுமாரி கருணாகரன் ஈகைச் சுடரினை ஏற்றினார்.


இந் நிகழ்வில் முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன் உரையாற்றும் போது வடமராட்சியின் பாரம்பரிய இசைக் குடும்பத்தில் தோன்றிய கருணாகரன் இசை மீது கொண்ட ஆழ்ந்த ஈடுபாட்டின் வழி இராமநாதன் நுண்கலை கழகத்தில் பயின்று சங்கீத ரத்தினம் பட்டம் பின்னர் சென்னை இசைக்கல்லூரியில் சங்கீதவித்துவான் பட்டம் பெற்றார். சங்கீத கலாநிதி மகாராஜபுரம் சந்தானத்தின் அபிமான சிஷ்யனாய் விளங்கினார்.

தேடல் நிறைந்த இசைக்கலைஞனாய் இளவயதிலேயே இசையுலகின் அங்கீகாரம் பெற்றார். யாழ்ப்பாண பல்கலைக் கழக இராமநாதன் நுண் கலைக்கழகம்,கிழக்குப் பல் கலைக்கழகசுவாமி விபுலானந்தர் அழகியல் கல்வி நிறுவனம்,சிங்கப்பூர் இசைக் கல்லூரி ஆகிய நிறுவனங்களின் இசைப்பேராசானாகி பல மாணவர்களை உருவாக்கினார்.அவரிடம் பாடம் கேட்கும் பெரும்பேறு எனக்கும் வாய்க்க என்ன தவம் செய்தேனோ. தவில் இசைக்கு தட்சணா மூர்த்திபோல எங்கள் கர்நாடக இசைப்புலத்தின் உச்சமாக பெருமை சேர்ந்தார்.

ஏ.கே.கருணாகரன் என தனது பிரதமவிருந்தினர் உரையிலே பேராசிரியர் அடிக் கோடிட்டார்.

இராமநாதன் நுண்கலைப் பீடவருகை விரிவுரையாளர் பொன் ஸ்ரீவாமதேவன்.


இசையாசிரியர் இசைக் கலைமணி திருமதி வாசஸ்பதி ரஜீந்திரன் , நல்லூர் சாரங்கம் இசைமன்ற இயக்குனர் , இசையாசிரியர்இசைக்கலை மணிசாந்த குமாரி கமலகாந்தன் ,வற்றாப்பளை மகா வித்தியாலயம் இணுவில் ரசிகப்பிரியா சபாகலை வளர்ச்சி மன்ற தலைவர்வி.கே.குகானந்தன் ஆகியோர் நிகழ்வின் சிறப்பு விருந்தினராக கலந்து உரையாற்றினர்.



இலங்கை ரூபவாகினி முன்னாள் பணிப்பாளர் சி.வன்னியகுலம்.ஓய்வு நிலை ஆசிரியர் க.லோகநாதன், வங்கிமுகாமையாளர் சி.கெங்காதரன், சக்திகலாசார மேம் பாட்டுமன்ற இயக்குநர் இராமதிகரன்.கலாபூஷணம் சி.சிவஞானராஜா, கலாபூஷணம் வதிரிசி.ரவீந்திரன் ,காப்புறுதி முகாமையாளர் வே.பாஸ்கரன், ஓய்வுநிலை ஆசிரியர் தர்ம சிறீராஜா,மாவட்டபயிற்றுவிப்பாளர் பா.முகுந்தன் ஆகியோர் நினைவுப் பேருரைகளை நிகழ்த்தியிருந்தனர். (5-6)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3007


ரஜினா





தேனிகா





சரண்யா




மாதவன்




விக்னேஷ்




ஆதிகேஷ்




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 2

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 367





**இருபத்தெட்டாம் அத்தியாயம்**
**இராஜபாட்டை**

மதங்கொண்ட யானை ஆழ்வார்க்கடியானுடைய கைத்தடிக்கும் அவனுடைய அதட்டலுக்கும் பயந்து நின்று விடுமா என்ன? தும்பிக் கையை எடுப்பாகத் தூக்கிக் கொண்டு, வழியிலிருந்த செடி, கொடிகளைச் சிதைத்துக் கொண்டு மேலே மேலே வந்து கொண்டிருந்தது. அடுத்த விநாடி ஆழ்வார்க்கடியானுடைய கதி அதோ கதி தான் என்பதில் இனிச் சந்தேகமில்லை. துணைக்கு வந்த வீரர்கள் இருவரும் நின்ற இடத்தில் நின்ற படியே 'ஹாய்' என்று கூச்சலிட்டார்கள். வந்தியத்தேவன் தன் கையிலிருந்து நழுவித் தரையில் விழுந்த வேலைத் திரும்ப எடுத்துக் கொண்டு கடைசியாக ஒரு முயற்சி செய்து பார்க்க எண்ணினான். அதே சமயத்தில் ஆழ்வார்க்கடியான் தன் கையிலிருந்து தடியை வீசி மத யானை மீது எறிந்தான்.

மறு கணம் ஆழ்வார்க்கடியானைக் காணவில்லை. அவனுடைய தலைப்பாகை காற்றில் பறந்து சென்று ஒரு மரக்கிளையில் விழுந்தது. ஆழ்வார்க்கடியான் என்ன ஆகியிருப்பான் என்று சிந்திப்பதற்குள்ளே அதைக்காட்டிலும் முக்கியமான சம்பவம் ஒன்று நிகழ்ந்து விட்டது. அவன் மறைந்த இடத்துக் கருகில் சென்ற யானை திடீரென்று மண்டியிட்டது போல் முன் கால்களை மடக்கிக் கொண்டு முன்புறமாகச் சாய்ந்தது. அந்த வனப்பிரதேசம் முழுதிலும் எதிரொலி செய்த ஒரு பயங்கரமான பிளிறல் சத்தம் கேட்டது. மறுகணத்தில் மலை போன்ற அந்த மத யானையின் உருவம் முழுவதும் மறைந்துவிட்டது. யானை அந்தப் படு பாதாளத்தில் உருண்டு உருண்டு விழுந்தபோது சரிந்து விழுந்த பாறைகளின் தூசிப் படலம் மேலே எழுந்து பரவியது. என்ன நடந்தது என்பதைச் சிந்தித்துத் தெரிந்து கொள்வதற்கு வந்தியத்தேவனுக்குச் சிறிது நேரம் ஆயிற்று.

ஆழ்வார்க்கடியானுக்குப் பின்னால் பெரும் பள்ளம் இருந்தபடியால் அவன் தடியை வீசி எறிந்த வேகத்தில் பின்புறம் சாய்ந்து விழுந்து விட்டான். அவனை நோக்கிச் சென்ற மதங்கொண்ட யானையும் முன்னங்கால் இரண்டையும் பள்ளத்தில் வைத்துவிட்டது. பிறகு சமாளிக்கப் பார்த்தும் முடியவில்லை. அதனுடைய குன்றொத்த உடலின் பெருங்கனமே அதற்குச் சத்துருவாகி அந்தப் பள்ளத்தில் கொண்டு தள்ளிவிட்டது! மத யானைக்கும் மத யானையை யொத்த ஆழ்வார்க்கடியானுக்கும் ஒரே நேரத்தில் ஒரே விதமான மரணம் சம்பவித்துவிட்டது!

இதை வந்தியத்தேவனுடைய உள்ளம் உணர்ந்ததும் அவனுடைய உடம்பு சிலிர்த்தது. அவனுடைய இதயத்தில் பெரும் வேதனை உண்டாயிற்று. அந்த ஸ்ரீவைஷ்ணவன் மீது வந்தியத்தேவனுக்கு முதலில் ஏற்பட்டிருந்த சந்தேகங்களெல்லாம் மறைந்து பிரயாணத்தின் போது அவன் பேரில் ஒரு வித வாஞ்சையே ஏற்பட்டிருந்தது. அப்படிப்பட்டவனுக்கு இத்தகைய கதியா நேர வேணும்? அவனுடைய உதவியும் வழித் துணையும் இல்லாமல் இனித்தான் ஏற்றுக்கொண்டு வந்த காரியத்தைத் தானாகவே செய்து முடிக்க வேணுமே என்ற கவலையும் தோன்றியது. வைஷ்ணவனும் யானையும் பள்ளத்தில் விழுந்து மறைந்த இடத்துக்கு அருகில் வந்தியத்தேவன் வந்து நின்று கீழே உற்றுப் பார்த்தான்.

முதலில் ஒரே புழுதிப் படலமாக இருந்தது. ஒன்றுமே புலப்படவில்லை. கொஞ்சம் கொஞ்சமாகப் புழுதி அடங்க, யானை சென்ற வழியில் செடி, கொடிகளும் பாறைகளும் ஹதமாகி விழுந்திருப்பது தெரிந்தது.

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## விலை மதிப்புள்ள பொருள்



சக்கரவர்த்தி அக்பர் திடீர் திடீரென உணர்ச்சிவசப்படுபவர். அவர் எப்போது உற்சாகத்துடன் இருப்பார், எப்போது எரிந்து விழுவார் என்று சொல்ல முடியாது. பல சமயங்களில், அவரையே கேலி செய்வதுபோல் அமைந்துள்ள நகைச்சுவைத் துணுக்குகளைக் கேட்டும் கோபம் அடையாமல் சிரிக்கவும் செய்வார். ஆனால், சில சமயங்களில் சில சாதாரண துணுக்குகள் கூட அவரை கோபமுறச் செய்யும்.

தர்பாரிலுள்ள அனைவருக்கும் அக்பரின் அடிக்கடி மாறுபடும் மனநிலையைப் பற்றித் தெரியும். அக்பரின் பேகத்திற்கும் இது தெரியும். ஆனால், பேகம் அதைப் பொருட்படுத்தாமல் பல சமயங்களில் அவரைக் கிண்டல் செய்வதுண்டு. சிலசமயம் அவளுடைய கேலிப் பேச்சினால் கோபமடைந்தாலும் சக்கரவர்த்தி உடனே அவளிடம் சாந்தமாகி விடுவார் என்ற அனுபவம்தான் காரணம்.

ஒருநாள் மாலை நேரம், அக்பரும் பேகமும் அந்தப்புரத்தில் அருகருகே அமர்ந்திருந்தனர். சாளரத்தின் வழியே வீசிய தென்றல் காற்றில் மல்லிகை மணம் தவழ்ந்தது. அதை அக்பர் வெகுவாக ரசித்துக் கொண்டிருந்தார். அப்போது அவரைக் கிண்டல் செய்ய வேண்டுமென்று பேகத்திற்குத் தோன்றியது. "ஏது! மல்லிகை மணம் உங்களை மயக்குகிறதோ என்னிடம் இல்லாதது மல்லிகையில் அப்படி என்ன இருக்கிறது?" என்று வாயைக் கிண்டினாள்.

"ஆம் மல்லிகை மணம் என்னை மயக்குகிறது. அதிலுள்ள மயக்கம் உன்னிடம் இல்லை!" என்றார் திடீரென எரிச்சலுற்ற அக்பர்.

"என்னைத்தான் நேசிக்கிறீர்கள் என்று நினைத்தேன். என்னை விட மல்லிகை மீது தான் மோகமா?" என்று பேகம் மீண்டும் வம்புக்கிழுத்தாள்.

"ஆமாம்! உன் மீது மோகம் இருக்க வேண்டுமென்று என்ன அவசியம்?" என்றார் மேலும் கோபமுற்ற அக்பர்.

"மனைவி என்ற முறையில் உங்களிடமிருந்து எதையும் எதிர்பார்க்க எனக்கு உரிமை உண்டு!" என்று பதிலளித்தார் பேகம்.

"அந்த உரிமை யாருக்கும் கிடையாது. நான் மற்றவர்களைப் போல் சாதாரண மனிதனில்லை. ஏனெனில் நான் சக்கரவர்த்தி!" என்று உரக்க முழங்கினார் அக்பர்.

"என்ன? எனக்குக் கூட கிடையாதா? நான் என்ன சாதாரண பெண்ணா?" என்றார் பேகம். அக்பர் தான் கேலியாகக் கேட்டதில் கோபமடைந்து விட்டார் என்று உணர்ந்த அவளுடைய கண்கள் பணித்தன.

"அந்த ஸ்தானத்தை நீ இழக்கும் வேளை நெருங்கிவிட்டது!" என்று அக்பர் ஒரு குண்டைத் தூக்கிப் போட, அதை சற்றும் எதிர்பாராத பேகம் அழுதே விட்டாள்.

ஆனால், அவள் கண்ணீரைப் பொருட்படுத்தாத அக்பர், "என்னுடன் உனக்கான உறவு இன்றுடன் முடிந்தது. நீ உன் பிறந்த வீட்டுக்கு நாளைக்கே போய் விடு! உனக்குப் பிடித்த பொருட்களை நீ எடுத்துச் செல்லலாம்" என்று சொல்லிவிட்டு கோபத்துடன் வெளியேறி விட்டார்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேர் வழியில் அடைய முடியாததை ஒருநாளும் குறுகிய வழியில் அடைந்துவிட முடியாது.

– கதே

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## தருமர் விட்டது தவறு சூதாடியது நாம் விடும் தவறு சந்திப்பது

மகாபாரத போர் நடப்பதற்குக் காரணம் என்ன? என்று ஆராய்ந்தால், ஆட்சி உரிமை என்பது அல்ல என்ற உண்மை தெரியவரும்.

இதை நாம் கூறும்போது இஃதென்ன கதை என்று நீங்கள் யாரேனும் கேட்கலாம். ஆனால் உண்மை அதுதான்.

ஆம், மகாபாரதப் போருக்கு மூலகாரணமாக அமைந்தது சூதாட்டமாகும்.

சூதாட்டத்தின்போது தருமர் பாண்டவர் மனையாள் திரௌபதியை சூதாட்டத்தில் பந்தயப் பொருளாக வைக்கிறார்.

அதில் தருமர் தோற்றுப்போக, கௌரவர் சபையில் திரௌபதி மானபங்கப்படுத்தப்படுகிறார்.

அவமானம் தாங்க முடியாத திரௌபதி அவிழ்ந்த கூந்தலை துச்சாதனின் குருதி பூசியே முடிப்பேன் எனச் சபதம் செய்கிறார்.

ஆக, செய்த சபதம் நடந்தாக வேண்டும். அதுதான் மகாபாரதப் போர்.

இங்குதான் ஓர் உண்மையை நாம் கூறியாக வேண்டும். அதாவது சூதாட்டத்துக்கு தருமரை துரியோதனன் அழைத்தபோது, அது தர்மமன்று எனக் கூறி அதிலிருந்து தர்மர் விலகியிருக்க வேண்டும்.

ஆனால் சூதாட்டம் என்றதும் தருமர் அது பற்றிக் கிஞ்சித்தும் சிந்தியாமல் அதற்கு உடன்பட்டார்.

அதன் விளைவாகத்தான் பாண்டவர்கள் வனவாசம் செல்ல வேண்டிய நிர்ப்பந்தமும் குருசேத்திரப் போர் நடக்கின்ற நிலைமையும் ஏற்பட்டது.

ஆக, பாண்டவர் தலைவர் தருமபிரான் சூதாட்டத்துக்கு உடன்பட்டது மிகப்பெரும் தவறு என்பது புரிதற்குரியது.

இங்குதான் நம் சைவ சமயம் பற்றிச் சிந்திக்கின்றபோது, இலங்கையில் மிக மோசமாக – அனைத்து மதங்களாலும் நிந்திக்கப்படுகின்ற சமயமாக சைவ சமயம் உள்ளது.

அதுதவிர, சைவ சமயத் தலைவர்களுக்கு எந்தவிதமான மதிப்பும் இந்த நாட்டில் வழங்கப்படவில்லை. அவர்கள் மூன்றாம் தரப்பாகவே நடத்தப்படுகின்றனர்.

எனினும் இதுபற்றிய புரிதல் இன்னமும் ஏற்படவில்லை.

இப்போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க யாழ்ப்பாணத்துக்கு வருகை தரவுள்ளார் என்றதும் அவரிடம் அறிக்கை கொடுப்பதற்கு நம்மவர்கள் தயாராகிவிட்டனர்.

என்னே செய்வது கடந்த முறை யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, நல்லை அதீனத்தில் சைவ சமயத் தலைவர்களைச் சந்தித்தபோது, பல கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன.

அவற்றை உடனடியாக நிறைவேற்றுவதாக ஜனாதிபதி உறுதியளித்தார். ஆனால் எதுவும் நடந்தாகவில்லை.

அப்படியாயின் இம்முறை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க யாழ்ப்பாணத்துக்கு வருகை தரும்போது அவரை சைவ சமயத் தலைவர்கள் ஏன் சந்திக்க வேண்டும்.

உண்மையில் சந்திப்பதைவிட சந்திக்காமல் தவிர்ப்பது எங்கள் தொடர்பில் கவனத்தை ஈர்க்கும்.

ஆகையால் இதுபற்றி நம் சைவ சமயத் தலைவர்கள் சிந்திக்க வேண்டும்.

உண்மையைக் கூறப்போனால் நாம் விடுகின்ற மிகப்பெரிய தவறு சந்திப்பதுதான்.

## பெறுமதி சேர் வரி அதிகரிப்பால் ஏற்பட்ட

# பொருளாதார நெருக்கடிகள் படிப்படியாக குறைவடையும்

## நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க

'பெறுமதிசேர் வரி அதிகரிப்பால் பொது மக்கள் பாதிக்கப்பட்டுள்ளமையை ஏற்றுக் கொள்கின்றோம். எனினும் இதனால் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிகள் இவ்வாண்டின் இரண்டாம் காலாண்டின் பின்னர் படிப்படியாக குறைவடையும்.

எனவே கடந்த ஆண்டைப் போன்று இவ்வாண்டும் மக்கள் அரசாங்கத்துக்கு முழுமையான ஒத்துழைப்பினை வழங்க வேண்டும் என்று நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க கேட்டுக் கொண்டார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று திங்கட்கிழமை (01) இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இந்த கோரிக்கையை முன்வைத்த அவர், மேலும் குறிப்பிடுகையில்,

2023 மூன்றாம் காலாண்டிலிருந்து பொருளாதார வளர்ச்சி வேகமானது நேர்மறையாகியுள்ளது. அதற்கமைய 2022இல் மறை பெறுமானத்துக்கு வீழ்ச்சியடைந்த பொருளாதார வளர்ச்சி வேகம் 2023இல் சராசரியாக 3 வீதத்தால் அதிகரித்துள்ளது.

அத்தோடு சர்வதேச நாணய நிதியத்தினால் இரண்டாம் கட்ட கடன் தொகை அங்கீகரிக்கப்பட்டதன் பின்னர் நாணய நிதியத்திடமிருந்து கிடைக்கப் பெற்ற 337 மில்லியன் டொலர், ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து கிடைக்கப் பெற்ற 220 மில்லியன் டொலர் மற்றும் உலக வங்கியிடமிருந்து கிடைக்கப் பெற்ற 250 மில்லியன் டொலர் என்பவற்றுடன் தற்போது 4 பில்லியன் டொலருக்கும் அதிக அந்நிய செலாவணி இருப்பைப் பேண முடியும் என்ற இலக்கை அண்மித்துள்ளோம்.

கடந்த ஆண்டு 70 சதவீதமாகக் காணப்பட்ட பணவீக்கம் தற்போது 5 வீதத்தை விடவும் குறைவடைந்துள்ளது. புதிய வரி திருத்தத்துக்கமைய பணவீக்கத்தை 5 சதவீதமாகப் பேணுவதற்கு எதிர்பார்த்துள்ளோம்.

கடந்த ஆண்டு 2,857 பில்லியன் ரூபா வருமானம் எமது இலக்காகக் காணப்பட்ட போதிலும், 3110 பில்லியன் ரூபா வருமானத்தைப் பெற்றுக் கொள்ள முடிந்தது.

அந்த வகையில் இவ்வருடம் தேசிய உற்பத்தி வருமானம் 11.2 சதவீதமாக அதிகரிக்கும் அதே வேளை, 2026 இல் தேசிய வருமானம் 15 சதவீதம் வரை உயர்வடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

2019இல் இலங்கையில் பதிவு செய்யப்பட்ட வரி செலுத்துபவர்களின் எண்ணிக்கை 1.7 மில்லியன் ஆகும். ஆனால் இவ் எண்ணிக்கை 2021 இல் 5 இலட்சத்து 7000 ஆகவும், 2022இல் 4 இலட்சத்து 37,500 ஆகவும் வீழ்ச்சியடைந்தது.

அதன் பின்னர் முன்னெடுக்கப்பட்ட மறுசீரமைப்புக்களின் அடிப்படையில் சுமார் ஒரு மில்லியனால் இந்த எண்ணிக்கையை அதிகரிக்க முடிந்தது. அந்த வகையில் இவ்வாண்டு பொருளாதார வளர்ச்சி வேகத்தை 1.8 - 2 வீதம் வரை அதிகரிக்க முடியும் என்று நம்புகின்றோம்.

இந்த இலக்கை அடைவதற்காக பெறுமதிசேர் வரி அதிகரிக்கப்பட்டுள்ளதால், மக்களுக்கு ஏற்படக் கூடிய பாதிப்பை குறைப்பதற்காக அஸ்வெசும நலன்புரி கொடுப்பனவுகளை பெற்றுக் கொள்ளும் பயனாளர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தற்போது சுமார் 14 இலட்சத்து 10,000 பேருக்கு அஸ்வெசும வழங்கப்படுகிறது. இதனை செலுத்துவதில் காணப்பட்ட குறைபாடுகளை நிவர்த்தி செய்து கொண்டு, இம்மாத இறுதியில் அல்லது பெப்ரவரியில் இவ்வாண்டுக்கான விண்ணப்பம் கோரப்படவுள்ளது.

சரியான நிதி முகாமைத்துவத்தைப் பேணி இலக்கை வெற்றி கொள்ளாமல், தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள எந்தவொரு வேலைத்திட்டங்களையும் மீளப்பெறவோ மாற்றவோ முடியாது.

எவ்வாறிருப்பினும் தற்போதுள்ள இந்த பொருளாதார நெருக்கடிகள் அனைத்தும் இவ்வாண்டின் இரண்டாம் காலாண்டின் பின்னர் படிப்படியாகக் குறைவடையும். எனவே இது தொடர்பில் விமர்சிப்பதற்கு எதிர்க்கட்சிகளுக்கு எவ்வித தார்மீக உரிமையும் கிடையாது.

கடந்த ஆண்டைப் போன்று இவ்வாண்டும் மக்கள் முழுமையாக ஒத்துழைப்புக்களை வழங்கினால் எம்மால் விரைவில் இந்த சுமைகளிலிருந்து மீள முடியும் என்றார்.(ம-7)

## கடமைகளை ஆரம்பித்து வைத்தார் ஜனாதிபதி

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 2024ஆம் ஆண்டு புத்தாண்டில் தனது கடமைகளை ஆரம்பித்து வைத்தன் பின்னர், முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் அமைச்சர்கள் மற்றும் அவரது ஊழியர்களைச் சந்தித்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க புதிய வருட கடமைகளை ஆரம்பிக்கும் முகமாக, தேசிய கொடியை ஏற்றிவைத்த பின்னர், நாட்டிற்காக உயிர்த்தியாகம் செய்த வீரர்களுக்கு ஒரு நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டதாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

பின்னர் ஜனாதிபதி அலுவலக ஊழியர்கள் அனைவரும் ஒன்றிணைந்து அரச சேவை உறுதிமொழியை எடுத்துக்கொண்டனர். (ம-7)

## பாரவூர்தி விபத்து; இருவர் உயிரிழப்பு

(கொழும்பு)

கட்டுவன - ஊருபொக்க வீதியில் பாரவூர்தி ஒன்று வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளானதில் இரண்டு பேர் உயிரிழந்தனர்.

அத்துடன், குறித்த விபத்தில் மேலும் இரண்டு பேர் காயமடைந்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வேக கட்டுப்பாட்டை இழந்த பாரவூர்தி ஊருபொக்க - ருக்மல்பிட்டிய பகுதியில் வீதியை விட்டு விலகி மரமொன்றில் மோதிய நிலையிலே குறித்த விபத்து நேர்ந்துள்ளது.

இந்தநிலையில், விபத்தில் காயமடைந்த நான்கு பேரும் கட்டுவன வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போது சிகிச்சை பலனின்றி பாரவூர்தியின் சாரதி உயிரிழந்தார்.

அத்துடன், ஏனைய மூன்று பேரும் மேலதிக சிகிச்சைகளுக்காக வரஸ்முல்லை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போது மற்றுமொருவரும் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

இந்நிலையில், ஏனைய இரண்டு பேரும் மேலதிக சிகிச்சைகளுக்காக கராபிடிய வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ம-7)

## 4 மாவட்டங்களுக்கு மண்சரிவு எச்சரிக்கை

4 மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாய முன்னெச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவகம் தெரிவித்துள்ளது.

இதன்படி, பதுளை, கண்டி, நுவரெலியா மற்றும் மொனராகலை ஆகிய மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாய முன்னெச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, நேற்று பிற்பகல் பெய்த பலத்த மழையின் காரணமாக, கொழும்பின் பல வீதிகள் நீரில் மூழ்கியிருந்தன.


இதேவேளை, தொடரும் சீரற்ற காலநிலை காரணமாக லுணுகலை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட 19ஆம் கட்டை பழைய தொழிற்சாலை பிரிவில், மண்சரிவு அபாயம் காரணமாக 115 குடும்பங்களைச் சேர்ந்த 400 பேர் இடம்பெயர்ந்துள்ளனர்.

அவர்கள் ஹொப்டன் 19ஆம் கட்டை விக்னேஷ்வரா தமிழ் வித்தியாலயத்தில் தற்காலிகமாக தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

(ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிராம அலுவலர் பிரிவுகள் தோறும் நடைமுறைப்படுத்த இருக்கும் மக்கள் சபைகள் (ஜனசபா)



01

கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.

உள்ளூராட்சி அரசாங்கத்துக்கு நீண்ட வரலாற்றுப் பாரம்பரியம் உண்டு. நாகரிகம் அடைந்த மக்கள் உள்ளூர்ப் புறங்களில் கூடிவாழ முற்பட்ட போதே அவர்கள் நலன் பேணும் உள்ளூர் அமைப்புக்களும் தோன்றி விட்டன. முடியாட்சி நிலவிய புராதன காலத்தில் கூட, ஏறத்தாழ எல்லா நாடுகளிலும் கிராமிய மட்ட அமைப்புக்கள் மக்கள் பங்குபற்றலையும் ஜனநாயகப் பெறுமானங்களையும் கணிசமான அளவில் பேணிவந்துள்ளன. உதாரணமாக இலங்கையின் கம்சபாக்கள், 'இந்தியாவின் பஞ்சாயத்துக்கள், சீனாவின் ஷியாங் என்ற குழுமங்கள், கிழக்கிந்தியத் தீவுகளின் 'மூத்தோர் கழகங்கள் ஆபிரிக்காவின் 'குலமரபுக் குழுக்கள்' முதலானவற்றைக் கூறலாம்.

இலங்கையின் தற்போதைய அரசியல் அமைப்பு முழுமையாக மாற்றப்பட வேண்டும் என்ற குரல் சில காலமாக எழுந்துள்ளது. குறிப்பாக அரசியல்வாதிகள் மற்றும் அதிகாரிகளின் ஊழலை தடுக்க அமைப்பில் மாற்றம் அவசியம் என மக்கள் கூறுகின்றனர். இலங்கையின் பாராளுமன்றம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி கட்டமைப்புகள் பிரதிநிதித்துவ ஜனநாயகத்தை நிலைநிறுத்துவதற்கும் பிரதிநிதித்துவ ஜனநாயகத்தின் ஊடாக மக்களின் இறையாண்மையை நடைமுறைப்படுத்துவதற்கும் நிறுவப்பட்டுள்ளன.

சமீப நாட்களில், இந்த கட்டமைப்புகளுக்கு வெளியே செயலில் உள்ள மக்களின் பங்கேற்பை உறுதிப்படுத்தும் ஒரு பங்கேற்பு ஜனநாயக மாதிரி தேவை என்று ஒரு விவாதம் வெளிவந்துள்ளது. கடந்த காலத்தில் இடம்பெற்ற காலிமுகத் திடல் போராட்டத்தின் ஊடாக ஜனசபைகள் அல்லது மக்கள் சபைகள் குறித்த விடயம் விவாதத்திற்குக் கொண்டு வரப்பட்டதன் மூலம் மீண்டுமொருமுறை ஜனசபைகள் அல்லது மக்கள் சபைகள் பற்றிய ஊடகங்கள் மற்றும் மக்கள் கவனத்திற்கு வந்தது.

பொதுமக்களின் கருத்துக்கள் விவாதிக்கப்பட்டு அவை தொடர்பான அரசியல் தலையீட்டிற்கான கட்டமைப்பு உருவாக்கப்பட வேண்டும் என்பது போராட்டத்தின் முக்கிய கோரிக்கைகளில் ஒன்றாகும்.

கடந்த காலங்களில் இலங்கையில் கிராம சபை முறையானது மக்களுக்கு நெருக்கமான ஒரு நல்ல அரசாங்கமாக இருந்தது. இது பிரதிநிதித்துவ தேர்தல் கோட்பாடுகளின் அடிப்படையில் அமுல்படுத்தப்பட்டு 1980இல் ஒழிக்கப்பட்டு 1991இல் உளளூராட்சி மன்ற முறை நடைமுறைப்படுத்தப்பட்டது. பழைய கிராம சபை முறைமை போன்றதொரு அரசியல் அமைப்பு மீண்டும் உருவாக்கப்பட வேண்டும் என சுட்டிக்காட்டிய முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய உள்ளிட்ட நியாயமான சமூகத்திற்கான தேசிய இயக்கம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் ஜனசபை யோசனையை முன்வைக்க நடவடிக்கை எடுத்தது. இது தொடர்பில் பல கலந்துரையாடல்கள் இடம் பெற்றதுடன் தற்போது ஜனாதிபதி ஜனசபைக்கு நம்பிக்கையான கருத்தை வெளியிட்டுள்ளார்.

இலங்கையில் உள்ளூராட்சி நீண்ட வரலாற்றையுடையது. இலங்கை வரலாற்று நூலான மகாவம்சம், உள்ளூர் நிர்வாகம் நாகர குட்டிக என அழைக்கப்படும் நகரத் தலைவர்களால் நடத்தப்பட்டதாகக் கூறுகிறது. இது தவிர கம்சபா என அழைக்கப்பட்டு வந்த கிராமச் சபைகளும் இருந்துள்ளன. கிராம நிர்வாகம் தொடர்பில் ஓரளவு அதிகாரம் கொண்ட கிராமத் தலைவர்களின் கீழ் அமைந்த இச்சபைகளுக்கு சிறிய குற்றங்கள் தொடர்பான விசாரணைகளைக் கையாளவும் தகராறுகளைத் தீர்த்து வைக்கவும் உரிமைகள் இருந்தன. அக்காலத்துக் கிராம சபைகள், முக்கியமாக வேளாண்மை தொடர்பான பொறுப்புக்களையே கவனித்து வந்ததுடன் அவை அரசாங்கத்தால் கட்டுப்படுத்தப்படவில்லை.

1818 ஆம் ஆண்டில், பிரித்தானிய அரசாங்கம் கிராமசபை முறையை இல்லாதொழித்தது. எனினும் 1856 ஆம் ஆண்டில் அவ்வரசு நிறைவேற்றிய நீர்ப்பாசனச் சட்டவிதிகளின் கீழ் பயிர்ச்செய்கை மற்றும் பாசனம் தொடர்பான நடவடிக்கைகளை எடுக்கக்கூடிய வாய்ப்பு உள்ளூர் மக்களுக்குக் கிடைத்தது.

### அன்றைய கம்சபாக்கள்

புராதன காலந்தொட்டு, கிராமத்தின் பிரதிநிதிகளை உறுப்பினராகக் கொண்ட கம்சபா (கிராம சபை) முறைதான் கிராம உள்ளூராட்சிக்குப் பொறுப்பாகவும் கிராமத்தின் சட்டதிட்டங்களை நிர்வகிக்கும் ஒரு தாபனமாகவும் இருந்து வந்தது. கிராமத்தின் சட்டதிட்டங்களையும் நெல் வேளாண்மையுடன் சம்பந்தப்பட்ட சகல கருமங்களையும் மேற்பார்வை செய்வதும் நீர்ப்பாசனத் திட்டங்களில் ஒவ்வொரு கமக்காரரினதும் பங்கையும் கடமைகளையும் பகிர்ந்து கொடுப்பதும் அதன் தலையான கடமைகளாயிற்று. குளங்களினின்று தமது பங்குக்குக் கூடுதலான நீரைத் தம் வயல்களுக்கு நீர்ப் பாய்ச்சியவர்களையும் குளங்களைப் பழுது பார்ப்பதில் தமது கடமைகளைச் செய்யத் தவறிய கமக்காரரையும் தண்டிக்க கம்சபாவுக்கு அதிகாரமிருந்தது.

இச்சபைகள் அரசாங்க ஆதரவுடன் இயங்கியமையினால் அவை கிராம வாசிகளின் இராசக்காரிய சேவை கொண்டு குளங்களைப் பழுது பார்த்து, நல் நிலையில் பாதுகாத்து வந்தன. பல கிராமங்களுக்கு நீரை உதவிய குளங்கள், அக் கிராமங்களின் விவசாயிகளின் இராசக்காரிய சேவையினால் பராமரிக்கப்பட்டன. 1818 இல் இராசக்காரிய முறை ஒழிந்ததன் பயனாகவும் கம்சபாக்களின் நீதி அதிகாரங்கள் பறித்தெடுக்கப்பட்டமையினாலும் நீர்ப்பாசன விவசாய முயற்சிகளை நிருவகிக்க கிராமங்களில் ஒரு நிறுவனமும் இல்லாமற் போயிற்று. படிப்படியாக நீர்ப்பாசனத் திட்டங்கள் சீரழிந்தும் இந்நெல் வயல்கள் எல்லாம் கவனிப்பாரற்றுக் காடுகளாகவும் மாறின. அதன் பின் நீர்ப்பாசனக் கட்டளைச் சட்டத்தை இயற்றி, கம்சபாக்களுக்கு மீண்டும் புத்துயிர் அளிக்க முற்பட்டனர். ஒரு மாவட்டத்திலுள்ள பெரும்பான்மையான விவசாயிகள் விரும்பிய விடத்து, அவர்கள் தம் விவசாய நீர்ப்பாசனக் கருமங்களை மேற்பார்வை செய்வதற்கு ஒரு கம்சபாவை அமைக்க அவர்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டது.

அரசாங்க முகவுரைத் தலைவராகவும் கிராம வாசிகளின் பிரதிநிதிகளை உறுப்பினராகவும் கொண்ட இச்சபை, அதன் முதல் வேலையாகக் கிர்ாமத்தின் பாரம்பரிய பழக்கவழக்கங்களின் நிரலொன்றைக் தயாரித்தது அது ஆள்பதியின் அங்கீகாரத்தைப் பெற்றவுடன் கிராமத்தின் சட்டமாயிற்று.

இச்சட்டதிட்டங்களை மீறுபவர்களைத் தண்டிக்கவும் கன்சபாவுக்கு அதிகாரம் வழங்கப்பட்டது. இந்த நீர்ப்பாசன கட்டளைச் சட்டம், ஆள்பதி உவாட்டின் காலத்தில் நிறைவேறிய திட்டங்களுள் முதன்மையான இடம் வகிக்கின்றது. இத்திட்டம், பல மாவட்டங்களில் விவசாயிகளின் சம்மதத்துடன் அமுல் செய்யப்பட்டது. 1856 இல் உவாட், நீர்ப்பாசன வேலைகளுக்காக கம்சபா முறையினைப் புதுப்பித்ததன் விளைவாக ஏற்பட்ட நற்பயன்களின் காரணமாக, 1871 இல் அதன் அதிகாரங்கள் மேலும் விஸ்தரிக்கப்பட்டன. சேர் ஹேக்கியுலிஸ் ஜொபின்ஸனின் ஆட்சியின் அதிமுக்கிய நிகழ்ச்சியாக அமைந்த இச்செயலினால் கம்சபாக்கள், கிராமங்கள் தோறும் ஸ்தல ஸ்தாபன விவகாரங்கள் யாவற்றையும் கட்டுப்படுத்த அதிகாரம் பெற்றன.

இச்சீர்திருத்தத்துக்கான முக்கிய காரணம், கீழ் நீதிமன்றங்களில் குவிந்த அளவுக்கு மிகுதியான சிறு பாதகவியல் வழக்குகளாகும்.

"1869 இல் சிறு நீதிமன்றங்களுக்கு முன்னிலையில் 168,426 பெயர்களுக்கெதிராக அல்லது குடிசனத்தின் 1/13 பகுதிக்கெதிராக வழக்குகள் தொடரப்பட்டன. இவற்றுள் 122,301 வழக்குகள் பூர்வீக விசாரணையின்றித் தள்ளப்பட்டன. 1/10 பகுதியினர் மாத்திரமே குற்றவாளிகளாகத் தீர்க்கப்பட்டனர். சாட்சியம் கொடுப்பதற்கு வரவழைக்கப்பட்டவர்களையும் சேர்த்தால் ஏறத்தாழ 1,000,000 பெயர்கள் அல்லது குடிசனத்தின் 1/10 பகுதி 1869 இல் கீழ் நீதிமன்றங்களின் முன்னிலையில் தோன்றினர்" எனக் கூறுகிறார். மில்ஸ் இந்த விபரீதமான நிலை எழுவதற்கு அடிப்படைக் காரணம் நாடெங்கும் நீதிமன்றங்கள் அமைக்கப்பட்டதைத் தொடர்ந்து கம்சபாக்கள் தம் அதிகாரங்களை இழக்க நேர்ந்தமையாகும். முன்னர் கிராமத்தின் சகல சண்டைகள், சச்சரவுகள், குற்றங்கள் யாவும் கிராமப் பழக்க வழக்கங்களை நன்கறிந்த உறுப்பினரைக் கொண்ட கம்சபாக்களினால் உடனடியாக விசாரணை செய்யப்பட்டுத் தீர்ப்புக்கள் கூறப்பட்டன. ஆனால் அச்சபைகளின் நீதி அதிகாரங்களைக் கமரன் நிராகரித்ததன் விளைவாகக் கிராம வாசிகள் நீதிமன்றங்களுக்குச் செல்லத் தொடங்கினர்.

உவாட் என்பவர் நீர்ப்பாசனச் சேவைகளின் பொருட்டுப் புனருத்தாரணம் செய்த கம்சபாக்கள் நீதி சம்பந்தமான கருமங்களை நிருவகிக்கப் போதிய அதிகாரம் பெறவில்லை. 1871 ஆம் ஆண்டின் 86 ஆம் இலக்க கம்சபா சட்டம் கம்சபாக்களுக்கு தனித்து கிராமங்களுடன் தொடர்புடைய விவகாரங்கள் சம்பந்தமாக புதுச் சட்டதிட்டங்களை ஆக்க அதிகாரம் வழங்கியது. இச்சட்டம், கம்சபாவின் உறுப்பினர்கள் ஐவரென்றும் இவர்கள் கிராமத்தின் நிலமுடையோரினின்று திருவுளச்சீட்டு மூலம் தேர்ந்தெடுக்கப்படுவர் என்றும் விதித்தது. ஆள்பதி றொபின்சன், முதலியார்களைத் தத்தம் மாவட்டங்களிலுள்ள கம்சபாக்கள் யாவற்றுக்கும் தலைவர்களாக நியமித்தார். கம்சபாக்கள் புராதன பழக்கவழக்கங்களுக்கு விரோதமாக இழைக்கப்பட்ட குற்றங்களையும் சிறு குடியியல் பாதக வழக்குகளையும் விசாரணை செய்து இரண்டு பவுணுக்கு மேற்படாத குற்றப்பணம் வரை தீர்ப்புக் கூற அதிகாரம் பெற்றது.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## லிட்ரோ...

டுள்ள நிலையில் அதன் புதிய விலை 4,250 ரூபாயாகும்.

இதேவேளை லாஃப்ஸ் சமையல் எரிவாயுவின் விலையையும் அதிகரிக்க லாப் எரிவாயு நிறுவனம் தீர்மானித்துள்ளது.

அதன்படி, 12.5 கிலோ கிராம் லாஃப்ஸ் சமையல் எரிவாயுவின் விலை 755 ரூபாயால் அதிகரிக்கப்பட்டுள்ள நிலையில் அதன் புதிய விலை 4,740 ரூபாய் ஆகும்.

மேலும், 5 கிலோ கிராம் லாஃப்ஸ் சமையல் எரிவாயுவின் விலை 305 ரூபாயால் அதிகரிக்கப்பட்டுள்ள நிலையில் அதன் புதிய விலை 1900 ரூபாய் ஆகும். (ம-7)

## மதுபானம்...

நேற்று முதல் அமுலுக்கு வரும் வகையில் மதுபானங்களின் விலையில் திருத்தம் மேற்கொள்ளப்படும் என டிஸ்டில்லரீஸ் நிறுவனம் அறிவித்துள்ளது.

இதன்படி, 750 மில்லி லீற்றர் மது பான போத்தல் ஒன்றின் விலை 90 ரூபாயினால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, மது வரி மற்றும் வற் வரி அதிகரிப்புடன் நேற்று முதல் சிகரெட்டின் விலை 4 வகைகளின் கீழ் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, சிகரெட்டின் விலையும் 5 ரூபாய், 15 ரூபாய், 20 ரூபாய் மற்றும் 25 ரூபாயினால் அதிகரிக்கப்பட்டுள்ளன. (ம-7)

## பெற்றோல்...

றோல் ஒரு லீற்றர் 20 ரூபாயினால் அதிகரிக்கப்பட்டுள்ளதுடன் அதன்படி புதிய விலை 366 ரூபாயாகும்.

அத்துடன் ஒக்டேன் 95 ரக பெற்றோல் ஒரு லீற்றர் 38 ரூபாயினால் அதிகரிக்கப்பட்டுள்ளதுடன் அதன்படி புதிய விலை 464 ரூபாயாகும்.

ஒட்டோ டீசல் 29 ரூபாயினால் அதிகரிக்கப்பட்டுள்ளது. அதன் புதிய விலை 358 ரூபாயாகும். சுப்பர் டீசல் விலை 41 ரூபாயினால் அதிகரிக்கப்பட்டுள்ளது. அதன் புதிய விலை 475 ரூபாயாகும்.

மேலும் மண்ணெண்ணெய் 11 ரூபாயினால் குறைக்கப்பட்டுள்ளது. அதன் புதிய விலை 236 ரூபாயாகும். (ம-7)

## விபரீத...

மல்லாகத்தில் விபரீத முடிவெடுத்த இளைஞன் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்று திங்கட்கிழமை காலை இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதில் வலிவடக்கு பிரதேச சபையில் சாரதியாக பணிபுரிந்து வரும் மல்லாகம் பகுதியைச் சேர்ந்த ரவீந்திரன் பிரசன்னா (வயது-28) என்ற இளைஞரே தூக்கில் தொங்கிய நிலையில் உயிரிழந்துள்ளார்.

சடலம் உடல்கூற்று சோதனைக்காக தெல்லிப்பழை ஆதார வைத்திய சாலையில் வைக்கப்பட்டுள்ளது.

மல்லாகம் ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தின் வீரரான குறித்த இளைஞர் விளையாட்டில் சிறந்த வீரராக விளங்கியதாக தெரிவிக்கப்படுகின்றது.

மேலதிக விசாரணைகளை தெல்லிப்பழை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

## மக்கள்...

யாழ்ப்பாணம் முத்திரை சந்தியில் உள்ள சங்கிலியன் பூங்கா தூய்மைப்படுத்தப்பட்டு நேற்று முதல் பொது மக்களினுடையபயன்பாட்டுக்குரிய பொழுது போக்கு மையமாக யாழ்.மாநகர சபையினால் திறந்து வைக்கப்பட்டது.

மேற்படி பூங்காவின் நீண்ட கால அபிவிருத்தி பணிகளில் ஏற்பட்ட தாமதங்கள் காரணமாக தற்காலிக பொழுது போக்குமையமாக பயன்படுத்தக்கூடிய வாறு மாற்றப்பட்டுள்ளதுடன் படிப்படியாக இதனை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தினமும் காலை 9 மணி முதல் மாலை 6.00 மணி வரைக்கும் பொது மக்களின் பயன்பாட்டுக்காக குறித்த பொழுதுபோக்கு மையம் திறந்திருக்கும்.

பொதுமக்கள் குறித்த பொழுது போக்கு மையத்தினை தற்போது இலவசமாக பயன்படுத்திக் கொள்ளலாம் என்றும் காலப்போக்கில் கட்டணங்கள் தொடர்பாக தீர்மானிக்கப்படும் எனவும் யாழ்.மாநகர சபையினரால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7,33)

## அரசின் வரித்...

யான அறிக்கைகளை வெளியிடும் தரப்பினருக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

"மக்கள் அரசாங்கத்துடன் இணைந்து உண்மையாக பணியாற்ற வேண்டும். அரசும் மக்களுக்காக உண்மையாக பணியாற்ற வேண்டும். அதுதான் மிக முக்கியமான விடயம்.

இங்கு, அரசியலை இலக்காகக் கொண்டும் வாக்குகளை இலக்காகக் கொண்டும் செயற்படுகின்றனர். ஒரு நாடாகப் பணியாற்றப் போகிறோம் என்றால் அல்லது அரசாங்கமாகப் பணியாற்றப் போகிறோம் என்றால் அனைவரும் ஒன்றிணைய வேண்டும்.

தவறு செய்பவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்போம். வற் வரி தொடர்பில் போலியான செய்திகளை பரப்பி வருகின்றனர். மக்களை தூண்டி விட்டு குழப்பம் விளைவிப்பவர்களுக்கு எதிராக கடுமையாக சட்டத்தை அமுல்படுத்த எதிர்பார்க்கிறோம்." என்றும் அவர் கூறினார். (ம-7)

## 2024 தமிழர்...

அவர் மேலும் கூறுகையில், "மலர்ந்துள்ள 2024ஆம் ஆண்டானது இன, மத, கட்சி வேறுபாடின்றி நாட்டு மக்களுக்குச் சமாதானம், மகிழ்ச்சி, சுபீட்சம் மிக்கதாக அமைய வேண்டும்.

அத்துடன் இந்த ஆண்டு தமிழ் மக்களுக்கு நம்பிக்கையையும் எதிர்பார்ப்பையும் கொண்டு வருகின்ற ஆண்டாகத் திகழ வேண்டும்.

இந்தப் புதிய ஆண்டிலாவது புதிய அரசமைப்பின் ஊடாகத் தீர்வு காணப்பட வேண்டும். ஆட்சியில் எந்த அரசு இருந்தாலும் இந்த விடயத்தில் உரிய கவனம் செலுத்த வேண்டும்.

இல்லையேல் தமிழர்களாகிய நாம் தீர்க்கமான முடிவுகளை இந்த ஆண்டில் எடுப்போம். அனைவருக்கும் எனது இனிய புதுவருட வாழ்த்துக்கள் என தெரிவித்துள்ளார். (ம-7)

## போதை...

தேற்ற பயன்படுத்தப்படும் ஊசிகள், ஒரு தொகை பணம் என்பன மீட்கப்பட்டதுடன் இருவர் கைது செய்யப்பட்டனர்.

நீண்டகாலமாக கோண்டாவில் செய்யப்பட்[illegible] பொருள் விற்பனையில் ஈடுபட்ட சந்தேக நபர் ஒருவர் 50,000 ரூபாய் பணத்துடன் திங்கட்கிழமை யாழ்ப்பாண பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் பொலிஸ் புலனாய்வாளர்களால் கைது செய்யப்பட்டார்.

சந்தேக நபரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளையடுத்து சந்தேகநபரின் வீடு மோப்ப நாய் சகிதம் கோப்பாய் பொலிஸாரால் தீவிர தேடுதலுக்கு உட்படுத்தப்பட்டது.

இதன்போது போதைப்பொருட்கள் சில கைப்பற்றப்பட்டன.

24 மற்றும் 21 வயதான இருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டதுடன் கைதானவர்களில் ஒருவர் பல வேறு குற்றச்செயல்களுடன் தொடர்புடையவர் எனவும் போதைப்பொருள் வியாபாரி எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சந்தேக நபர்கள் இருவரும் மேலதிக நடவடிக்கைக்காக கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டனர். (ம-7,33)


லக்கி 7 VIP
திகதி 2024.01.01
சீட்டிழுப்பு இலக்கம் 0172
N 3 3 1 5 9 8 N
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி 2024.01.01
சீட்டிழுப்பு இலக்கம் - 1376
Z 19 36 56 72 Z
Double Chance 15092

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3588
சீட்டிழுப்பு திகதி 01.01.2024
ஆங்கில எழுத்து Y
வெற்றி இலக்கங்கள் 06 16 26 58
Y 31884
தேசிய லொத்தர் சபை

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2024.01.01
சீட்டிழுப்பு இலக்கம் 0655
மேஷம் 02 32 35 54 மேஷம்
31355 16

மஹஜன சம்பத
திகதி 2024/01/01
சீட்டிழுப்பு இலக்கம் 5346
0 5 7 3 0 8 9
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 01/01/2024
சீட்டிழுப்பு இலக்கம் 1694
K 06 18 21 59 63
57449

உத்தியோகபூர்வ முடிவுகள்
01.01.2024 வெற்றி வாரம் 054 வர்ணம் ஊதா
G 0 1 6 5 6 5
68192
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 25,332,839.20
DLB தொலை பேசி: 011-2 333 546-47 Web: www.dlb.lk
வெற்றி பெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2320 வர்ணம் ஊதா
சீட்டிழுப்பு திகதி 2024.01.01 தினம் திங்கட்கிழமை
வெற்றி இலக்கங்கள் 16 69 74 76 H
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 64,546,919.20
35651

சனிதா
திகதி 2024.01.01 வெற்றி வாரம் 4481
06 47 67 71 Z
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.68,633,711.20
72580
வெற்றி பெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4032 வர்ணம் மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி 2024.01.01 தினம் திங்கட்கிழமை
வெற்றி இலக்கங்கள் 01 02 37 48 கன்னி
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 3,000,000/-
542924

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
Y 15 13 46 66 74
1496 பச்சை 01.01.2024 திங்கள்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 486,540,906.20
DLB தொலை பேசி 011-2 333 546-47
வெற்றி பெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

ஜயோதா Jayoda
திகதி 2024.01.01 வெற்றி வாரம் 1987 வர்ணம் செம்மஞ்சள்
03 24 25 35 Z
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.21,229,026.00
68533

ADA KOTIPATHI
திங்கட்கிழமை
வெற்றி வாரம்: 2146
வர்ணம்: சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 2024.01.01
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.80,277,864/-
10 20 52 64 E
330185


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எரிபொருள் விலைகள் அதிகரிக்கப்பட்டாலும்

## பஸ் கட்டணம் உயராது

பிரதான எரிபொருள் விற்பனை நிறுவனங்கள் எரிபொருள் விலைகளை நேற்று முதல் அதிகரித்துள்ள போதிலும் பஸ் கட்டணங்கள் அதிகரிக்கப்படாதென போக்குவரத்து ஆணைக் குழு அறிவித்துள்ளது.

போக்குவரத்து ஆணைக்குழுவின் தலைவர் சசி வெல்கம இது தொடர்பில் கூறுகையில், "எரிபொருள் விலைகள்நேற்று காலை முதல் குறிப்பிடத்தக் களவு அதிகரிக்கப்பட்டுள்ளன. என்றாலும், அதற்கு ஏற்றவாறு பஸ் கட்டணங்கள் அதிகரிக்கப்படாது" என்றார். (ம-7)

## கடினமான...

பத்தரமுல்லை - அக்குரேகொடவில் புதிய விமானப் படைத் தலைமையகக் கட்டிடத்தை நேற்று திறந்துவைத்து உரையாற்றும்போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சரியான தீர்மானங்களுடன் இவ்வருடத்திற்குள் இலங்கையை துரித பொருளாதார அபிவிருத்தியை நோக்கி கொண்டுசெல்லப்படும்.

அதற்குத் தேவையான கடினமாக தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளதாகவும் விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டாலும், நாட்டின் நலன் கருதிய தீர்மானங்களையே தாம் மேற்கொண்டிருப்பதாகவும், நாட்டைப் பாதுகாப்பதற்கான பொறுப்புக்களை உணர்ந்து மற்றைய அரசியல் வாதிகளும் புதிய வருடத்தில் ஒன்றுபடுவர் என எதிர்பார்ப்பதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

இன்று நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப வேண்டிய போராட்டத்தை எதிர்கொண்டுள்ளோம். நான் ஜனாதிபதியாக நாட்டைப் பொறுப்பேற்ற போது, நாட்டின் பொருளாதாரம் முழுமையாக சரிவடைந்திருந்தது. நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்பும் பொறுப்பு என்னிடம் ஒப்படைக்கப்பட்டது.

இங்கு அரசியல் செய்வதா? இல்லாவிட்டால் நாட்டின் பொருளாதாரத்திற்காக பணியாற்றுவதா? என நேரடியாக அமைச்சரவையுடன் ஆலோசிக்க நேர்ந்தது.

பொருளாதார வேலைத்திட்டத்தை இரு வருடங்கள் காலம் தாழ்த்தியதால் லெபனான் பெரும் பிரச்சினைகளை எதிர்கொண்டது. அரசியல் ஸ்திரமற்ற நிலைமையினால் கிரேக்கம் பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள 13 வருடங்கள் திண்டாடியது. அவர்கள், அரச ஊழியர்களின் சம்பளத்தை 50 சதவீதமாக குறைக்க நேர்ந்தது.

இருப்பினும் நாம் அந்த நிலைமைக்கு செல்லவில்லை. சரிவடைந்து கிடந்த எமது மொத்த தேசிய உற்பத்தி எமது நேரடி தீர்மானங்களின் பலனாக முன்னேற்றம் கண்டது. 2023 ஆண்டு இறுதியில் ஓரளவு வலுவான பொருளாதார நிலைமை உருவாகியுள்ளது.

நாட்டின் பொருளாதாரத்தைப் பலப்படுத்துவதற்கான தீர்மானங்களை, சரியான நேரத்தில் மேற்கொள்ள வேண்டும். இவ்வருடத்தில் நாட்டின் பொருளாதார வளர்ச்சி வேகம் 3% ஆக அமையும் என நம்புகிறேன்

இதற்காக 8%-9% வரையிலான இலக்கை அடைய வேண்டும். அந்த வளர்ச்சியை எவ்வாறு ஏற்படுத்த முடியும் என்பது தொடர்பிலேயே ஆராய்ந்து வருகிறோம். எவ்வாறாயினும், நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கான கடினமான தீர்மானங்கள் அனைத்தும் எடுக்கப்பட்டுள்ளன.

விமர்சனங்களுக்கு உள்ளாகினாலும் நாட்டின் நலன் கருதிய தீர்மானங்களையே நாம் எடுத்துள்ளோம். நாட்டைப் பாதுகாப்பதற்கான பொறுப்புக்களை உணர்ந்து மற்றைய அரசியல்வாதிகளும் ஒன்றுபட வேண்டியது அவசியமாகும்.

அனைவரும் ஒன்றுபடும் பட்சத்தில் 2024 ஆம் ஆண்டுக்குள் நாட்டிற்குள் மிகத் துரிதமான அபிவிருத்தியை ஏற்படுத்த முடியும் என்பதில் சந்தேகமில்லை. என்று தெரிவித்த ஜனாதிபதி, இந்த வேலைத் திட்டத்துடன் அனைவரும் ஒன்றிணைய வேண்டும் என்று அழைப்பு விடுத்தார். (ம-7)


### வேலையாட்கள் தேவை

திருநெல்வேலியில் இயங்கும் Super Market ஒன்றிற்கு வேலையாட்கள் தேவை

- முகாமையாளர் (ஆண்) 35 - 50 வயது
- பணியாளர்கள் (இருபாலாரும்)

சம்பளம் நேரில் பேசித் திர்மானிக்கப்படும்
அனுபவமுள்ளவர்களும் விரும்பத்தக்கது. (18471)

077 221 0294

### கண்ணீர் அஞ்சலி

யாழ். பல்கலைக்கழக நண்பன்
திரு. இ.உதயன் அவர்களின் பாசமிகு தாயார்



அமரர் இராசையா தவமணி

அவர்களின் மரணச் செய்தி அறிந்து துயரடைகின்றோம். அன்னாரின் இழப்பால் துயருறும் அவர்தம் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தி பெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

அன்னாரின் இறுதிச்சடங்கு இன்று (02.01.2024) செவ்வாய்க்கிழமை மதியம் 12.00 மணியளவில் அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி (ஆஸ்பத்திரியடி) எனும் முகவரியில் நடைபெறும். (இ)

பிரிவால் துயருறும்...
1989/90, யாழ். பல்கலைக்கழக கலைப்பீட மாணவ நண்பர்கள்

### வெளிநாடுகளுக்கான விரைவு பொதிகள் DHL

சகல நாடுகளுக்கான கடிதங்கள் 3-5 நாட்களில் ஒப்படைக்கப்படும்.
சகல நாடுகளுக்கான பொதிகள் 5-7 நாட்களில் ஒப்படைக்கப்படும்.

திருமுருகன் கொம்நெற்
321, K.K.S வீதி யாழ்ப்பாணம்.
0777 554 528 (18357)

### வீடு விற்பனைக்கு

அரியாலை மாம்பழம் சந்திக்கு அருகாமையில் 2 3/4 பரப்பளவைக் கொண்ட மூன்று அறைகள், முழுவதும் மார்பிள் பதிக்கப்பட்ட அழகிய வீடு விற்பனைக்கு உண்டு. (18431)

077 664 8287

### பணிப்பெண் தேவை

யாழ் நகரில் உள்ள சிறிய குடும்பம் ஒன்றிற்கு வீட்டில் தங்கி இருந்து பணிபுரிவதற்கு பணிப்பெண் ஒருவர் தேவை. (18470)
தொடர்புகளுக்கு :
077 647 8362

### வேலையாள் தேவை

சுன்னாகத்தை அண்மித்த பகுதியில் இரும்புக் கடையில் பொருட்கள் எடுத்துக் கொடுப்பதற்கு ஆள் தேவை. (18468)

075 617 8008

### மணமகள் தேவை

1978 11 இல் சூரியன் செவ்வாய் உள்ள கிரகபாவம் 56 உடைய சொந்த வியாபாரம் செய்யும் மணமகனுக்கு மணமகள் தேவை. (18469)

075 617 8008

### VISA விண்ணப்பங்கள்

அனைத்து நாடுகளுக்குமான விசா விண்ணப்பங்கள்,ஆலோசனைகள்

- ✓ ONLINE APPLICATIONS
- ✓ VISA APPOINTMENTS
- ✓ PASSPORT APPLICATION
- ✓ POLICE CLEARANCE

என அனைத்து விதமான விசா ஏற்பாடுகளும் செய்து தரப்படும். (C-8066)

VISA • STUDENT VISA • TOURIST VISA • SPOUSE VISA • SUPER VISA
கனடா ஐரோப்பா ஜெர்மனி பிரான்ஸ் லண்டன் சுவிஸ் அமெரிக்கா

Srilankan Visa Extension வெளிநாட்டு Passport களுக்கு இலங்கை விசா நீட்டித்து தரப்படும்

COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS
49A,சப்பல் லேன், யாழ்ப்பாணம். V2 TRAVELS
0777-068-777

### பௌதிகவியல் (A/L) 2024/ 2025

தனிப்பட்ட/குழு வகுப்புக்கள்
மீட்டலும் கடந்த கால (Past paper classes)வினா விடைகளும்
35 வருட கற்பித்தல் அனுபவமுள்ள ஆசிரியர்...
ஆ.நித்தியானந்தன் BSc,Dip in Ed
தொடர்புகட்கு : 076 799 9005
Home Visit available (18433)

### ஆகாஸ் நகை மாடம்

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (18465)

076 825 7716 (ஆகாஸ்)

### உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் தனிநபர் பதிவு இலக்கம் (TIN) பதிவு செய்து தரப்படும்.

(C-8065)
076 037 3294

### யாழ். கச்சேரிக்கு அருகில் காணி உடன் விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கச்சேரிக்கு அருகில் 3 1/2 பரப்புக் காணி, இரண்டு வெட்டுக் கிணறுகளுடன் உடன் விற்பனைக்கு உண்டு. இந்தக் காணி சுண்டுக்குழி தபால் நிலையத்துக்கு அருகில் - கச்சேரி நல்லூர் வீதியில் அமைந்துள்ளது.
55 மில்லியனுக்கு (5 கோடியே 50 லட்சம்) மேலான விலை எதிர்பார்க்கப்படுகிறது.
(கிழமை நாட்களில் பார்வையிடலாம்) (18434)
தொடர்புகளுக்கு :
+447963743585(Whatsapp)
021 222 7141(Srilanka)
E.mail : Jamesraj_uk@yahoo.co.uk




### CANADA VISITOR VISA

VISITOR VISA வில் கனடா செல்வதற்குரிய ஆலோசனைகள் மற்றும் Online விண்ணப்பங்கள் விரைவாக செய்து தரப்படும்

CIMS COLLEGE (C-8066)
0777-068-777
49A,சப்பல் லேன், யாழ்ப்பாணம் V2 TRAVELS


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தினால் இல.191, [illegible] றோட், யாழ்ப்பாணம் எனும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 02.01.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org